Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY — தேசிய தினசரி

போன். 389 — தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 — யாழ்ப்பாணம், பிலவ கார்த்திகை 5 ஆம் நாள் — ஐ. ஆகிர் 11 — (20-11 61) திங்கட்கிழமை — இதழ் 238

# எம்.பிக்கள்மீதுவழக்கு

## நாளை கோர்ட்டில் ஆஜராவர்

### எதிர்த்து வழக்காட தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

தடைசெய்யப்பட்டுள்ள தமிழரசுக் கட்சியின் நான்கு எம். பி.க்கள் மீதும் ஒரு வழக்கறிஞர்மீதும் யாழ்ப்பாணம் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு தொடரப்பட்டுள்ள வழக்கு சம்பந்தமாக நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நிதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நான்கு எம். பி.க்களும் புரக்டரும் ஆஜராவார்கள்.

சென்ற பெப்ரவரி மாதம் 20-ந் திகதி சட்டவிரோதமாகக் கூடியதாகவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தாவையும் யாழ்ப்பாண பொலிஸ அதிகாரி திரு. ஆண்ட்டையும் அவர்களது கடமையைச் செய்யவிடாது தடுத்ததாகவும் குற்றம் சாட்டி திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம், வி ஏ. கந்தையா டாக்டர் நாகநாதன், புரக்டர். எஸ். நடராசா ஆகியோர்மீது இவ் வழக்கை யாழ்ப்பாணம் பொலிசார் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்தனர்.

நவம்பர் 21-ந் திகதி இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று நீதிபதி 'சம்மன்ஸ்' பிறப்பித்திருந்தார். இவர்களுக்கு 'சம்மன்ஸ்' வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

இதன்படி நாளை 21ந் திகதி செவ்வாய்க்கிழமை இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராவர்.

இக் குற்றச்சாட்டுக்களை எதிர்த்து வழக்காடுவதென தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## "கலையையும் பண்பாட்டையும் பாதுகாக்கவேண்டும்"

### வரவேற்புக்கு எஸ. ஜே. வி. நன்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இன்று அளிக்கப்பட்டிருக்கும் இந்த வரவேற்பு தனிப்பட்டமுறையில் எனக்கு அளிக்கப்படவில்லை. தமிழர்கள் தமக்கென உள்ள கலையையும் பண்பாட்டையும் பாதுகாகவேண்டும் என்பதே தமிழ்பேசும் மக்களின் நோக்கம். வருங்காலத்தில் தமிழ்மக்கள் தன்னம்பிக்கையுடன் வாழக்கூடும்என்பதில் சந்தேகம்கொள்ளவேண்டாம் என்பதே நான் தமிழ்ப்பேசும் மக்களுக்கு விடுக்கும் செய்தியாகும்."

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப்பேசிய திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினர். நகரமண்டபத்தில் நடைபெற்ற இந்த வரவேற்பு வைபவத்துக்கு மேயர் திரு. டி எஸ். துரைராஜா தலைமை தாங்கினர்.

பெதிரளான ஜனக்கூட்டம் நகரமண்டபத்துக்குள்ளும்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்கள் யு. என். பி. யுடன் சேர்ந்து சதி செய்கின்றனரா?

### நிரூபிக்கும்படி யாழ்ப்பாணம் நகர மேயர் சவால்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தமிழர்களுக்கு, யூ. என். பி.க் கட்சியும் கூட்டுச்சேர்ந்து அரசாங்கத்தை முறியடிக்க முயற்சிப்பதாக பிரதம மந்திரியும், நிதியமைச்சரும் ஏனைய மந்திரிமாரும் அடிக்கடி கூறிவருகிறார்கள். தமிழர்களாதல தான் இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது என்பதை பிரதம மந்திரி யானுலும் அல்லது வேறு யாராவது மறுக்கமுடியுமா என்பதை நிரூபிக்குமாறு நான் பிரதம மந்திரிக்கு ஓர் பகிரங்கச் சவாலை விடவிரும்புகிறேன்".

இவ்வாறு சனிக்கிழமை பகல் யாழ்ப்பாணம் மாநகர சபை மண்டபத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும் தடுப்புக்காவலிலிருந்து விடுதலை பெற்றுவந்த 75 பேருக்கும் பொதுமக்கள் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்துக்குத் தலைமைவகித்துப் பேசிய யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

தமிழ்ப் பேசும் மக்களின் சேவைக்காக திரு. செல்வநாயகம் தமது பணத்தைச் செலவழித்து மிகவும் திடசக்தியுடன் தாயகம் திரும்பியிருக்கிறார். எமது பிற்சந்ததியின் நலனைக்கருதி திரு. செல்வநாயகம் செல்லும் வழியில் செல்ல கடமைப்பட்டவர்களாவோம். இதுகாறும் தமிழ்ப்பேசும் மக்களுக்குள் இருந்து வந்த ஒற்றுமையை நிலைநாட்டக் கூடியவர் திரு. செல்வநாயகம் அவர்களே. இந்த ஒற்றுமையை நிலைநாட்டும் மார்க்கத்திலேயேதான் தலைவர் இல்லாத சமயத்திலும் அவர் இஷ்டத்தை ஊசித்து கீழ்மாகாணவாசியாகிய திரு மாணிக்கத்தை செனட்டராகத் தெரிவு செய்திருக்கின்றனர்.

எந்தெந்தக் கொள்கையை நாம் மேற்கொள்வர்களாக இருந்தபோதிலும் ஒருதலைவரின்கீழ் ஒன்றுபட்டு செயலாற்றுவதே சிறந்தது.

செனெட்ட்ர் திரு. எம். மாணிக்கம் பேசியபோது கூறியதாவது:

என்னிலும் பார்க்க கூடிய காலம் தமிழரசுக் கட்சியிலிருந்து சேவையாற்றியவர்களும் தகுதி வாய்ந்தவர்களுமான நியாயவாதிகள் எஸ். நடராசா ஆகியோர் இருக்கக்கூடியதாக கீழ்மாகணத்தைச் சேர்ந்த என்னை செனெட்டராக தெரிவுசெய்த ஒரே நோக்கம் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கே பாகும். இதற்கு நான் நன்றி உள்ளவனக இருக்கின்றேன். நாம் ஒரு சமூகமாக இலங்கையில் சுய மரியாதையுடன் வரழ வேண்டுமானுல் எமது ஒற்றுமையை வளர்க்கவேண்டியது அவசியம்.

(5 பக்கம் பார்க்க)

## "தமிழர்கள் தன்னம்பிக்கையுடன் வாழவேண்டும்

### தொழில் துறையை பெருக்குவது அவசியம்"

### திரு. எஸ். ஜே. வி. புத்திமதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைவாழ் தமிழர்ஒருவர்இருவராக உலகெங்கும் பரவிக்கிடக்கிறார்கள். அங்கெல்லாம் அவர்கள் தன்னம்பிக்கையோடு வாழ்வதை நான் அண்மையில் வெளி நாடு சென்றபோது கண்டேன். தன்னம்பிக்கையோடு தமிழர்கள் சுய முயற்சியால் முன்னேறுவது நாம் காணக்கூடிய செல்வமாக இருக்கும். பொருள்வளமுள்ளவர்கள் கூட்டாகச் சேர்ந்து நாட்டு முன்னேற்றத்திற்காக தொழில் துறைகளை ஆக்கி அளிக்க வேண்டும். படித்த வாலிபர்கள் உத்தியோகம் என்ற மண்குதிரையை நம்பி இனியும் வாழக் கூடாது. கைத்தொழில், கமத்தொழில் போன்றவற்றில் ஈடுபட்டு நாட்டுக்காகவும் சமூகத்திற்காகவும் தனக்காகவும் உழைத்து நற்சேவை புரிய வேண்டியது அவசியம். தொழில்துறைகளில் ஈடுபடுகிறவர்களுக்கு உதவியும் உற்சாகமும் அளிக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் தலையாய கடனுதம்."

இவ்வாறு திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் கடந்த சனிக்கிழமை மாலை, பளையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வடமாகாண தெங்குப் பொருள் தொழிற்சாலையைக் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றுகையில் கூறினர். கடந்த 7 மாதங்களின்பின் முதன்முதலாக திரு. செல்வநாயகம் கலந்து கொண்ட இப் பொது வைபவத்தில் நூற்றுக்கணககானோர் கலந்து கொண்டனர்.

திரு. செல்வநாயகம்தொழிற்சாலையைத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து தொழிற்சாலை இயந்திரங்கள் இயக்கிவிடப்பட்டன. நீர்கொழும்பிலிருந்து வருவிக்கப்பட்டிருந்த நிபுணர்கள் இத்தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தும்புத் தொழிலில் கைதேர்ந்த இவர்கள் இயந்திர இயக்கத்தின் மூலம் தும்பு உற்பத்தியை ஆரம்பித்துக்காட்டினர். திரு செல்வநாயகமும் மற்றும் எம். பி.க்கள் பிரமுகர்களும் பொது மக்களும் தும்பு உற்பத்தி செய்வதைப் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற திறப்புவிழா சிறப்புக் கூட்டத்திற்கு திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் தலைமை தாங்கினர். அவர் தமது தலைமையுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

இத்தொழிற்சாலையை நிர்மாணித்திருப்பவர்களுக்கு இந்நாட்டின் சார்பிலே

(4-ம் பக்கம் பார்க்க)

## நாவாந்துறை கொலை வழக்கு

### சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாவாந்துறை கொலைவழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

நாவாந்துறையைச் சேர்ந்த லோறன்ஸ் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக செல்லத்தம்பி ஆசீர்வாதம் என்பவர்மீது குற்றம் சாட்டி யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் எம். வல்லிபுரம் இவ் வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

எதிரியின்சார்பில் திருவாளர்கள் சாம் ஏ. சபாபதியும், ஆர். விசுவநாதனும் ஆஜரானர்கள்.

திரு. சாம் சபாபதி வழக்கை எடுத்துரைக்கையில் காலஞ்சென்றவர் தம்மைச் சுட்டவர் யார் என்பதைத் தெரிவிக்கச் சந்தர்ப்பமிருந்தும் ஆஸ்பத்திரியில்தான் ஆசீர்வாதம் தம்மைச் சுட்டதாகத் தெரிவித்திருக்கிறரென்றும், நாவாந்துறையில் பல ஆசீர்வாதங்கள் இருக்கின்றனரென்றும் கூறினர்.

ஆங்கிலம் பேசும் ஜூரிமார் முன்னிலையில் தம்மை விசாரிக்கவேண்டுமென எதிரி கேட்டுக்கொண்டார்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## மணிலா சுருட்டு

ரூபா 5-00 மணியோடர் அல்லது போஸ்டல் ஓடருடன் வரும் ஓடர்களுக்கு 10 பாக்கெற்றுகள் கொண்ட 100 சுருட்டுகள் தபால்செலவின்றி அனுப்பப்படும்.

முன் ஏஜண்டுகளுக்கு விண்ணப்பம் செய்யாத ஊர்களிலிருந்துவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணத்தில் வியாபாரிகளுக்கு விற்பனைசெய்ய சைக்கிள் உள்ளவர்கள் நேரில் வரவும். தகுந்த கமிஷன் தரப்படும்.

மனேஜர், யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை, ஐக்கியவியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்.

## தேவை

அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகத்திற்கு, "ஹைடல் பேக், ஓட்டமற்றிக், பிளேட்டன்" மெசினில் சகல வேலைகளும் செய்யக்கூடிய தகுதி வாய்ந்த அனுபவமுள்ள ஒருவர் அவசியம் தேவை.

விரும்பியோர் நற்சாட்சிப்பத்திரங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு மனுச் செய்க.
மனேஜர் அ. இ. மி. அச்சகம், மானிப்பாய்.

## ஏஜண்டுகள் தேவை

தமிழ் ஆங்கில அறிவுள்ள ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். பிணைப் பணம் ரூ. 350/- சம்பளம் ரூ. 100/
மனேஜிங் டிரெக்டர், தேவர் ஆர்ட் புரடக்ஷன் C/o K. பாலகிருஷ்ணர், 23, கண்டி ரோட், கம்பளை.

## மலைநாட்டு முஸ்லிம் அராபிய இலக்கிய சங்கம்

பதுளை, ஞாயிறு

நம் முஸ்லிம் இனத்தவரிடையே கலாச்சாரம் வளரவும், நமது புனித அராபிய மொழியில் உள்ள பல அரிய இலக்கியங்களைக் கற்று இன்பமும் பயனும் பெறவும் இப்படிப்பட்ட ஒருமன்றம் தேவையாக இருந்தது. இது இன்று தோன்றியுள்ளது. இதனைச் செயல்ப்படுத்த அனைவரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்." என்று மலைநாட்டு முஸ்லிம் கலாச்சார அராபிய இலக்கிய சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பேசும்போது அதன் செயலாளர் திரு. எஸ். ஏ. எச். செரிப்டீன் கூறினர்.

அன்றைய கூட்டத்தில் நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. போஷகர்களாகத் திருவாளர்கள் கே.எம். சுவேர் எம். கே. எஸ். அமீது ஏ. அப்துல்காதர் லெப்பை முதலியோரும், தலைவராக எம். அப்துல்கபூரும் செயலாளராக எஸ். ஏ. எச். செரிப்டீனும்' துணைச் செலாளராக எம். இசட்முனுப்டீனும், தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொருளாளராக ஏ. எம். அனிபாவும், துணைத்தலைவர்களாக மௌலவிகள் ஏ. எம். ஜமால்டீன், டி. எஸ். அப்துல் சஹிமான், ஜே. எம். பசீர் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## இன்னும் சம்பளமில்லை

திருக்கோணமலை, வியாழன்

திருக்கோணமலைப் பகுதியில் உள்ள பாடசாலைகளில் வேலைசெய்யும் கனிஷ்ட ஊழியர்களுக்கும் குமாஸ்தாக்களுக்குமான சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லையாம். வழமையாக இவ்வூழியர்களுக்குச் சம்பளம் அந்தந்த மாதமுடிவுகளின் போது 'செக்' மூலம் வழங்கப்பட்டுவந்தது.

# "பெயரில் பல நோக்கம் செயலில் ஒரே நோக்கம்"

## வவனியா எம். பி. விளக்கம்

முள்ளியவளை, ஞாயிறு

"பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுட் பல, பல நோக்கம் உடையனவாக இயங்கவில்லை. குறிப்பிட்ட ஒரு சில நோக்கங்களாவது அவற்றிற்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஒரே ஒரு நோக்கந்தான் அவற்றிற்கு இருப்பதாகத் தெரிகிறது. அதுதான் நெல் வியாபாரம்! அங்கத்தவர்களிடம் நெல்லை வாங்கிக் கமிஷனுக்குக் கொடுப்பதுதான் அவற்றின் வேலையாக இருக்கிறது." இவ்வாறு நீராவிப்பிட்டிக் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"ஏழைக் கமக்காரர் நெல் விளைவிப்பதற்குத் தேவையான உதவிகளைக்கூட அச் சங்கங்கள் செய்வதாகக் காணோம். வேறு பகுதிகளிலுள்ள சங்கங்கள், பசளை, முள்ளுக்கம்பிகள் கடனுக்குக் கொடுப்பதுடன், அறுவடை காலத்தில் பண உதவியும் செய்கின்றன. இங்குள்ள சங்கங்களிலும் சமாஜத்திலும், கடன் வழங்கப் பணம் இல்லையாம்! இதற்கிடையில் ஊழல்கள் ஒருபுறம். இதை நீக்கவே, விரைவில் விசாரணை நடைபெறவிருக்கிறது."

## காரியாதிகாரிக்கு எம். பி. பாராட்டு

முள்ளியவளை, ஞாயிறு

"தன்னலங் கருதாது தொண்டாற்றும் ஊழியர்களுள், கரைதுறைப்பற்றுக் காரியாதிகாரி திரு. மா. நடராசாவும் ஒருவர். நான் தடுப்புக்காவலில் இருந்த காலத்திற்கூட, இப்பகுதி மக்களுக்கு உபயோகமான காரியங்கள் பல செய்த அதிகாரி அவர். விராலியிலுள்ள தென்னம்பிள்ளைக் காணிகள் முஸ்லிம்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென முயற்சி செய்தவர் அவரே."

தண்ணீரூற்று அரசினர் முஸ்லிம் பாடசாலையில் நடைபெற்ற கிராமரபிவிருத்தித் திட்டக் கூட்டத்தில், காரியாதிகாரியைப் பாராட்டிய வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம், மேற்கண்டவாறு கூறினர்.

காரியாதிகாரி தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், தண்ணீரூற்றுக் கிராம விதானையார் திரு. பொ. செல்வநயகம், முள்ளியவளைக் கிராமசபைத் தலைவர் திரு. வெ. அண்ணமலை, கிரமாமுன்னேற்ற மேற்பார்வையாளர் திரு. பெனடிக்ற் முதலியோரும், பெருந்தொகையான முஸ்லிம்மக்களும் கலந்துகொண்டனர்.

## பலநோக்குச் சங்க நிர்வாகிகள்

தெல்லிப்பழை, ஞாயிறு

உருத்திரபுரம் ஜெயந்தி நகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் திரு. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. துரைராஜா, காரியதரிசி: திரு. ச. அந்தோனிப்பிள்ளை. திருவாளர்கள் ஆர். பிரான்சீஸ், நா தங்கவேலு, கே. தேவராசா, எம். சேதுபாண்டியர், கே. சின்னத்தம்பி ஆகியோரைக் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## மட்காப்பு வாரம்

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிப்பகுதி மட்காப்பு வாரப்பிரசாரத்தை பருத்தித்துறையில் புலோலியில் உள்ள கிருஷிக இலாகா காரியலயத்தில் விவசாயத்துறைப் போதனசிரியர் திரு. கே. கனகசபாபதி ஆரம்பித்து வைத்தார்.

ஐந்து உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்கள் பிரிவையும் சேர்ந்த இளம் கமக்காரர் சங்க, சனசமூக, கி. மு. ச. பிரதிநிதிகள் உட்பட பலர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பற்றில் பெண்கள் விவசாயப் பாடசாலை

அக்கரைப்பற்று, வெள்ளி

மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களிலுள்ள பெண்களுக்கென அக்கரைப்பற்றுப் பகுதியில் ஒரு பெண்கள் விவசாயப் பாடசாலை விவசாய இலாகாவினல் ஆரம்பிக்கப்படும். அதற்கான ஏற்பாடுகளை விவசாய இலாகா மேற்கொண்டுவருகிறது. இப்பாடசாலையில் வருடத்தில் 40 மாணவிகள் தங்கி பயிற்சி பெறுவார்கள். கோழி வளர்ப்பிலும், நவின முறையில் மேட்டுநிலபயிர் சாகுபடி, ஜப்பானிய முறையில் நெற்சாகுபடி ஆகியவைகளில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

## கிராம சபையின் புதிய வரித்திட்டம்

அல்லைப்பிட்டி, ஞாயிறு

அண்மையில் கூடிய அல்லைப்பிட்டிக் கிராம சபை தமது வருவாயை உயர்த்துவதற்காக பின்வரும் முறைப்படி வரி அறவிட வேண்டுமெனத் தீர்மானித்துள்ளது.

ரெட்டிச்சாலை, மீன்கடை, கருவாட்டுக்கடை, மில், பலசரக்குக்கடை, அரசாங்க நிலத்தில் உள்ள வீடுகள், விடுதிகள், சிற்பி சூழைவைக்கும் இடம், தேனீர்ச்சாலை, போன்றவற்றிற்கு ஒவ்வொரு விகிதப்படி வரி அறவிடப்படுவதுடன் மண்கும்பானில் மணல் ஏற்றும் லொறி ஒன்றுக்கு ஒரு ரூபாய் கிராம சபைக்குச் செலுத்த வேண்டும் என்றும் வண்டி ஒன்று 35 சதம் செலுத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டம் தலைவர் திரு. க. கைலாசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

## கதிர்காம மடங்கள்

### சாம்பல் தீவு கி. ச. எதிர்ப்பு

தருக்கோணமலை, சனி

கதிர்காம மடங்களை மாணிக்க கங்கையின் மறுகரைக்கு அகற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பிரேரணையொன்று சாம்பல் தீவு கிராமச் சபையினரால் ஏகமனதாக நிறைவேற்றப் பெற்றுள்ளது.

இத் தீர்மானத்தின் பிரதிகளை கௌரவ பிரதம மந்திரி ஸ்ரீமாமோ பண்டாரநாயக்காவுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## கலைவிழா ஏற்பாடு

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை முத்தமிழ் மன்றம் தைப்பொங்கல் தினத்தன்று கலைவிழா வொன்றை நடாத்துவதற்கு முயற்சி எடுத்துவருகிறது.

கொழும்பு ஸ்ரீ ஜயந்தி நகரில்

# திருமண்டபத் திறப்புவிழா

## திரு. சங்கரலிங்கம்பிள்ளை உரை

கொழும்பு, ஞாயிறு

"உலகம் இன்று ஒரு நெருக்கடியான கட்டத்தில் இருந்து வருகின்றது. பயங்கர நாசசக்திவாய்ந்த அணுகுண்டுகளைப் பெரிய வல்லரசுகள் மலைமலையாகக் குவித்துக்கொண்டு மனித குலத்தையே பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. இது போதாதென்று அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 3-ம் திகதி எட்டுக்கிரகங்கள் ஒன்று கூடுகின்றன. இந்தத் தீய சூழ்நிலையிலிருந்து உலகத்தை இறைவன் தான் காப்பாற்ற வேண்டும்."

இவ்வாறு ஜயந்தி நகர் என்ற ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் புதிய மண்டபத்திறப்பு விழாவில் தெக்ஷிணத்து வேளாளர் மகமை பரிபாலன சபைத் தலைவர் திரு. ஏ. எஸ். எஸ். சங்கரலிங்கம்பிள்ளை குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"கதிர்காம கேதுக்கிரகத்துக்கு நமது தாய் நாடான பாரத புண்ணிய பூமியிலிருந்து பிரதி வருடமும் பல்லாயிரக் கணக்கான சைவ அன்பர்கள் நம் நாட்டுக்கு வந்து போவதை நீங்கள் அறிவீர்கள். அவர்கள் கொழும்புக்கு வந்தால் இங்கு தங்கிச் செல்ல வசதியானதொரு இடம் இல்லாதது பெருங் குறையாக இருந்து வந்திருக்கிறது.

இக்குறையை நீக்குவதற்கே ஜயந்திநகர் ஸ்ரீ சிவசுப்பிரமணியஸ்வாமி கோவிலில் சகல வசதிகளுமுள்ள ஒரு அழகான விடுதியைக் கட்டி முடித்துள்ளோம்.

இந்த மேலான நற்பணிக்கு பலவிதங்களிலும் உதவி செய்த ஒவ்வொருவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்று ஆரம்பமாகும் விழா டிஸம்பர் மாதம் 8-ந் திகதி வரை நடைபெறும். இவ்விழாவுக்காக நமது அழைப்பை ஏற்று சொல்லின் செல்வன், ஞானபாஸ்கரர் ஸ்ரீ டி. இராமானுஷ அய்யங்கார் இங்கு வருகை தந்திருக்கிறார். அவருக்கும் எங்கள் நன்றி உரியது.

## துப்பாக்கியை ஒப்படைக்கத் தவறியதாக வழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அப்பாபிள்ளை கனகசபாபதி என்பவர் அரசாங்க உத்தரவுப்படி அவரிடமுள்ள துப்பாக்கியை பொலிசாரிடம் ஒப்படைக்கத் தவறியதாகக் குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆனைக்கோட்டைப் பொலிசார் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

எதிரி சுற்றவாளியெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து மேல்விசாரணை அடுத்தவருடம் ஜனவரிமாதம் 23-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## கிராமசேவகர் பட்டியல்

கொழும்பு, ஞாயிறு

இவ்வாண்டு ஜூன் மாதம் நடைபெற்ற கிராம சேவகர் பரீட்சைக்குத் தோன்றியவர்கள் அனைவரின் பெயரையும் கொண்ட பட்டியல் ஒன்றை கைத்தொழில் உள்நாட்டுக் கலாசார அமைச்சு வெளியிட்டுள்ளது. 17,200 பேர் இப் பரீட்சைகளுக்குத் தோற்றியிருந்தார்கள். இவர்களது பெயர்களைக்கொண்ட பட்டியல் புத்தக வடிவத்தில் அரசாங்க அதிபர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிகிறது. கச்சேரிகளில் பட்டியல்கள் பார்வைக்குத் தொங்கவிடப்படும்.

## அச்சுவேலிக் கொலை வழக்கு தாக்கல்

மாவிட்டபுரம், ஞாயிறு

அச்சுவேலியைச்சேர்ந்த சின்னத்தம்பி செல்லையா என்பவரை அடித்துக் கொலை செய்ததாகக் காங்கேசன்துறை பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ் வழக்கில் அச்சுவேலியைச்சேர்ந்த இளையதம்பி சின்னத்தம்பி, சின்னத்தம்பி தவராசா, சின்னத்தம்பி சபாபதி, ஆறுமுகம் சுப்பையா, சுப்பையா கனகரத்தினம், சின்னத்தம்பி வேலுப்பிள்ளை, இளையதம்பி கந்தசாமி ஆகிய ஏழுபேர்மீதும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## தொழிற்சாலையில் திருடியதாக வழக்கு

தெல்லிப்பழை, ஞாயிறு

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலைக்குச் சொந்தமான பித்தளைக் கம்பிகளையும் இரும்பு வளையங்களையும் திருடியதாக வீ. இரத்தினசிங்கம், பி. கணேசு, ஆ. கந்தையா, விசுவநாதன், சி. முருகேசு, ஆகியோர்மீது காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டு மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டபோது மூன்ரும் எதிரியான ஆ. கந்தையா கோட்டில் ஆஜராகாது வைத்திய சர்டிபிக்கேட் அனுப்பிவைத்தார். நீதிபதி வழக்கை அடுத்தமாதம் 9-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

# மலாயாவில் அடுத்த வருடம் மலாய்தான் போதனமொழி

கோலாலம்பூர், சனி

எல்லாப் பாடங்களும் மலாயிலேயே கற்பிக்கப்படும் தேசிய மொழி வகுப்புகள் அடுத்த வருடம் சிலாங்கூர் ஆங்கிலப் பாடசாலைகளில் அமைக்கப்படும்.

ஆனல் இவ்வித வகுப்புகளின் எண்ணிக்கை, பெற்ரோர்கள் மாணவர்களின் இஷ்டத்தையும், தேவையையும் பொறுத்தே ஆரம்பிக்கப்படும் என்றும் பிரதம கல்வி அதிகாரி திரு. ஜே. இ. பி. அம்புரோஸ் கூறினர்.

இதற்கு எவ்வளவு ஆதரவு கிடைக்கும் என்பது பற்றி தாங்கள் தற்போது மதிப்பிட முயற்சி செய்து வருகிரோம் என்றும் அவர் சொன்னர்.

எனினும் இத்தகைய புதிய தேசிய மொழி பாடபோதனை வகுப்புகள் அரசாங்க பழைய ஆங்கில ஆரம்பப் பள்ளிகள் அநேகவற்றில் இருந்து வரும்

# 'மயிலிட்டியில் மீன்பிடி துறைமுகம் அமைக்கவும்'

## காங்கேசன்துறை பட்டினசபை கோரிக்கை

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன் துறை பட்டின சபையின் மாதாந்தக்கூட்டம் தலைவர் திரு. ஏ. இ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது மயிலிட்டிக்கரையில் உள்ள மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகள் வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றுல் பெரிதும் சேதம் அடைவதால் உடனடியாகக் காங்கேசன் துறைக்கு ஒரு மீன்பிடித்துறைமுகத்தை மயிலிட்டிக்கரையில் அமைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்று நிறைவேறியது. இப்பிரேரணையை பட்டின சபையின் 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. பி. இம்மானுவேல் பிரேரிக்க 5-ம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். சிவனடியார் ஆமோதித்தார்.

காங்கேசன் துறையிலுள்ள வாடிவீட்டை பொதுமக்களின் உபயோகத்திற்கு ஏற்றதாக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் மற்றுமொரு பிரேரணையும் ஏகமனதாக நிறைவேறியது.

தற்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் மலைபோல் வளர்ந்துவருவதால் பல கோடி ரூபாய்கள் வருமானம் தரக்கூடிய காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்து வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை ஒன்றும் ஏகமனதாக நிறைவேறியது.

# மடங்களை அகற்றும் திட்டத்துக்கு

## இலங்கை செட்டியார் வர்த்தக சபை ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி

கதிர்காம மடங்களை அகற்றும் உத்தேசத் திட்டத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து இலங்கை செட்டியார் வர்த்தக சபை நகர நிர்மாண அதிகாரியும் கதிர்காம அபிவிருத்தித் திட்ட நிர்மாண அதிகாரியுமான திரு. என். குணரத்தினவுக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளனர்.

சபையின் சார்பில் காரியதரிசி திரு. எஸ். கருணாநிதி கையொப்பமிட்டுள்ள இந்த மகஜரின் பிரதிகள் பிரதமமந்திரி, ஸ்தலஸ்தாபனமந்திரி, புத்தள கிராமசபைத் தலைவர் திரு. பி. வி. ஜயசிங்கா ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளாதாவது:

பல நூற்றாண்டுகளாக இருந்து வந்துள்ள இந்த 22 மடங்களும அவை இருக்கும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதன் காரணத்தை அறிந்து கொள்வது கஷ்டமல்ல. கதிர்காமத்து முருகன் வீதி வலம் வரும்போது இம்மடங்களின் வாயில்களைத் தாண்டியே செல்வதுண்டு. இம் மடங்களின் அமைப்பு, வீதி வலம்வரும் முருகனைப் பூசிப்பதற்கு வசதியளிக்கின்றது. இம்மடங்கள் இடமாற்றஞ் செய்யப்பட்டால் பலவருடங்களாக நடைபெற்று வந்த ஆராதனைகளைக் கைவிட வேண்டி நேரிடும். எனவே மடங்களை அகற்றுவதால் இந்துக்களால் போற்றப்பட்டு வந்த இப்பூர்வீகமான புனித பழக்கத்தை அவர்கள் இழக்க வேண்டி நேரிடும்.

இம்மடங்கள் பலவற்றில் பரிசுத்தமுடைய கோவில்களும் பூஜை ஸ்தானங்களும் உள்ளன. அங்கு நாளுக்கு இருமுறை பூஜைகள் நடைபெற்று வருகின்றன. செட்டியார்களினல் ஸ்தாபிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வரும் மடம் இத்தகையதொரு மடமாகும். மடங்களை அகற்றுவதென்றால் அங்குள்ள கோவில்களையும் வழிபாட்டு நிலையங்களையும் அகற்றுவதாகும்.

இம்மடங்கள் கடவுள் சிந்தனைக்குரிய ஸ்தானங்களாகவும் யாத்திரிகர்கள் தங்குவதற்கான இடங்களாகவும் பிரார்த்தனை மண்டபங்களாகவும் இந்துக்களுக்குப் பயனளித்து வந்துள்ளன. அத்தோடு திருவிழாக் காலங்களில் யாத்திரிகர்களுக்கு இவை பெரிதும் உதவி வந்துள்ளன. கதிரமலைக் கோவிலுக்கு இம்மடங்களிலிருந்து இலகுவாகச் செல்ல முடியுமாகையாலேயே யாத்திரிகர்களுக்கு இவை பெரிதும் பயன்பட்டு வருகின்றன. இம்மடங்களில் யாத்திரிகர்களுக்கு உதவக் கூடிய ஸ்தானததில் அமைக்கப்பட்டிருப்பதாலேயே யாத்திரிகர்கள் இவற்றைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர்.

தென்னிந்தியாவிலுள்ள திருச்செந்தூர், பழனி, திருப்பதி, மதுரை போன்ற இந்து ஸ்தலங்களில் இத்தகைய மடங்கள் நூற்றுக்கணக்கான வருடங்களாக இருந்து வருகின்றன. சென்னை அரசாங்கம் இதுவரை ஸ்தலங்களுக்குரிய இம்மடங்களை இடமாற்றஞ் செய்ய எத்தனிக்கவேயில்லை.

# கிணற்றுள் விழுந்த இளம்பெண் மரணமானுர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம், நல்லூர், வைமன்ருேட்டைச் சேர்ந்த சுந்தரராஜக் குருக்கள் கைம்பெண் ராஜேஸ்வரி அம்மா, (வயது 30) நேற்று, தமது வளவிலுள்ள கிணற்றில் விழுந்து, குற்றுயிராக எடுக்கப்பட்டு, பின் மரணமானுர்.

மரண விசாரணையின்போது காலஞ்சென்ற ராஜேஸ்வரி அம்மாவின் மாமியாரான திருமதி சாரதாம்பாள் சாட்சியமளிக்கையில், இறந்தவர் தமது மகனின் மனைவியென்றும், தமது மகன் 3 வருடங்களின் முன்பே இறந்துவிட்டதாகவும், அவர்களுடைய ஒரே ஆண் குழந்தையும் இறந்தவரும் தம்முடனேயே வாழ்ந்து வந்ததாகவும், சம்பவம் நடந்த அன்று அதிகாலை சுமார் 6-30க்கு கிணற்றுப் பக்கமாகக் கூக்குரல் கேட்டுத்தான் ஓடிச்சென்று பார்க்கையில், தமது கணவர் கத்திக்கொண்டிருந்ததாகவும், ராஜேஸ்வரி அம்மா கிணற்றுள் கிடந்ததாகவும், கூறினுர். அச்சமயம் அயலவர் பலர் அங்கு கூடியதாகவும், திரு. மாணிக்கம் பொன்னையா என்பவர் கிணற்றுள் குதித்து ராஜேஸ்வரி அம்மாவை வெளியே எடுத்ததாகவும், அப்பொழுது அவர் குற்றுயிராயிருந்ததாயும், பின், ஆனைப் பந்தியடியி லிருக்கும் டாக்டர் எஸ். கணேசையா வந்து சிகிச்சையளித்த சில நேரத்தின் பின் அவர் இறந்துவிட்டதாகவும் சாட்சி மேலும் கூறினுர்.

தவறுதலாக ஏற்பட்ட விபத்து மரணம் என, மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் தீர்ப்பளித்தார்.

# கள்ள வோட்டு போட்டவருக்கு 2 மாதச் சிறை

யாழ்ப்பாணம், சனி

பலாலியைச் சேர்ந்த வேலு கதிரகாமுஎன்பவர் சென்றவருடம் மார்ச் மாதம் பலாலியில் நடைபெற்றஉள்ளுர்தேர்தலின் போது கள்ளவாக்களித்ததாக குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதி திரு. என். கிருஷ்ணதாசன் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. முடிக்குரிய வழக்கறிஞர் திரு. டி. முத்துச்சாமிப்பிள்ளை வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

விசாரணையின்போது எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு அவருக்கு இரண்டு மாதச் சிறைத்தண்டனை விதித்தார்.

எதிரிசார்பில் திரு.ஏ. நித்தியானந்தனின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானுர்.

# சச்சரவு தீர்ந்தது

கொழும்பு, வெள்ளி

இ. போ. ச. வைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் சிலர்கடுமையாக நடந்துகொண்டார்கள் என்ற காரணத்திற்காகஹொரணையில் நேற்று இங்குள்ள மாணவர்கள் பிரதான பஸ்நிலையத்தில் பஸ் போக்குவரத்தை தடைசெய்தார்கள். இனர்கள் வீதியிற்படுத்து பஸ் செல்லாதவாறு தடுத்தனர்.

பின்னர் இ. போ. ச. அதிகாரிகளும் பொலிஸாரும் தலையிட்டு சச்சரவைத்தீர்த்துவைத்தனர்.

# கொப்பரா விலை மேலும் வீழ்ச்சி

கொழும்பு, வெள்ளி

கொப்பரா விலையில் நேற்று மேலும் 25 சதம் வீழ்ச்சி ஏற்பட்டது.

# வரப்பெற்ருேம்

**விவேகானந்தா திருக்குறட் கலண்டர் 1962 விவேகானந்தா டயறி 1962; விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம், கிளை: ஆதிருப்பள்ளித்தெரு. கொழும்பு.**

விவேகானந்தா திருக்குறட் கலண்டர் வழக்கம்போல் சகல மதத்தினருக்கும் வேண்டியவிபரங்களுடனும், ஆங்கிலம்,அரபு, தமிழ் திகதிகளுடனும் அழகாக தயாரிக்கப்பெற்றுள்ளது. இக் கலண்டரிலுளள பஞ்சாங்கக் குறிப்புகள்யாவும், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கப்படி கணிக்கப்பெற்றுள்ளன. படங்களின் அழகேதனி.

விவேகானந்தா டயறிகள் பெரிய, சிறிய அளவுகளில் உபயோகமான விபரங்களுடன் வெளியிடப்பெற்றுள்ளன. மாணவர்களுக்கும் மற்றையோருக்கும் உபயோகமானவை.

# "தமிழாசிரியர் சேவை மலைநாட்டுக்குத் தேவை"

## பண்டாரவளையில் உடுப்பிட்டி எம்.பி.

பண்டாரவளை, ஞாயிறு

"தமிழ் ஆசிரியர்களே உங்கள் சேவை, மலைநாட்டுக்குத் தேவை என்பதை மறந்துவிடக்கூடாது. மலைநாட்டில் தமிழ் முழக்கம் செய்யும் பிரதிநிதிகள் நீங்கள்தான். மலைநாட்டில் மங்கிக் கிடக்கும் தோட்டப் பிள்ளைகளுக்கு அறிவுக் கல்விசி, அவர்களுக்கு புதுவாழ்வு காட்ட நீங்கள் முன்வரவேண்டும். மலைநாட்டுத் தமிழ் சகோதரர்களே நீங்கள் சாதி சமய வேறுபாடுகளைக் கடந்து நம்மை ஒற்றுமைப்படுத்த வல்ல நமது அருமைத் தமிழ் சகோதரர்களே நீங்கள் சாதிசமய வேறுபாடுகளைக் கடந்து நம்மை ஒற்றுமைப்படுத்த வல்ல நமது அருமைத் தமிழ்மீது கவனம் செலுத்த வேண்டும். ஒருமை காட்டும் தமிழ் மொழியிற் பற்றுக் கொண்டு உழைப்போமாயின் யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான் மலைநாட்டான் என்ற பிளவு நீங்கி நமக்குள் ஒருமைப்பாடு நிகழும் என்பது திண்ணம்."

இவ்வாறு பண்டாரவளையைச் சேர்ந்த புதுநாகவத்தைத் தோட்டப் பாடசாலையின் வருடாந்த கலைவிழாவில் சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய உடுப்பிட்டி பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் கூறினுர். திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசுகையில் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்பரவவேண்டும்" என்று கனவு கண்ட கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் உருவச்சிலையை இவ்விழாவில் திரைநீக்கம் செய்து வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறு ஒவ்வொரு தோட்டத்திலும் பாரதியின் உருவச்சிலை மாத்திரமல்ல அவரது கனவும் நனவாகி பவனி வர வேண்டும்" என்ருர்.

திருவாளர் நா. முத்தையா, ஆ. செல்லையா முதலியோரும் பேசினர். பாடசாலை மாணவ மாணவிகளால் "யூலியஸ் சிசர்" என்ற நாடாகமும், நடனம், கும்மி, கோலாட்டம் முதலியனவும், அரங்கேற்றப்பட்டன. தலைமையாசிரியர் திரு. நா. திருச்செல்வம் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். ஆசிரியர் திரு. நா] தியாகராசா நன்றியுரை கூறினுர். விழாவில் பரிசு பெற்ற மாணவ மாணவிகளுக்கு விழாவுக்கு தலைமை தாங்கிய தோட்டத்துரை திரு. ஆர். டபிள்யூ. மேயர் பரிசில்களை வழங்கினுர்.

# வாடகைச் சைக்கிளை விற்றனராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருநெல்வேலியைச் சேர்ந்த கதிரவேலு, கந்தசாமி என்ற இரு வாலிபர்களும் கல்வியங்காட்டு சந்தையில் கடைவைத்திருக்கும் கே. தம்பிராசா என்பவரிடம் ஒரு சைக்கிளை வாடகைக்கு எடுத்து பின் அதைப் பருத்தித்துறையில் கொண்டுபோய் விற்றுவிட்டதாக யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரத்தினுல்குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில். தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொள்ளவே முன்றுவருடத்துக்கு பாதுகாவல் அதிகாரியின் மேற்பார்வையில் நன்னடத்தையிலிருக்க உத்தரவிடப்பட்டதோடு ரு. 50 நீதிமன்ற செலவாகக் கொடுக்கும்படியும் உத்தரவிடப்பட்டது.

# புலோலி தாச்சிக் கோஷ்டி வெற்றி

பருத்தித்துறை, ஞாயிறு

புலோலியூர் தாச்சிக் கோஷ்டி பருத்தித்துறை கோஷ்டியுடன் கலந்துகொண்ட தாச்சிப்போட்டியில் ஆறு மேலதிக ஆட்டங்களால் வெற்றியீட்டியது. மழையில் நடைபெற்ற இப்போட்டி ஆட்டங்கட்கு திரு. க. சுப்பிரமணியம் மத்தியட்சம் வகித்தார். இருபகுதி வீரர்களும் முறையே 15: 9 ஆட்டங்களை வென்றனர்.



இது உயர்ந்த நாகரிகம்!
இது இந்திய கைத்தறி!

சிறந்த நிறங்களில், உயர்ந்த நாகரீகத்தில், பெண்மையின் எழிலோங்க இந்திய கைத்தறித் துணிகளைத் தேர்ந்தெடுங்கள்.
பருத்தி நூலால் தயாரிக்கப்பட்ட புடவைகள் மற்றும் மேலாடைகளும் பலவிதமான மாயாஜால நிறங்களில் கிடைக்கின்றன.

தேவர்களுக்கும் உகந்த கைத்தறித் துணிகள் இந்தியாவைப்போன்ற.. புராதனப் பெருமையுடையவை.

ஹாண்ட்லூம்ஸ்
கவர்ன்மென்ட் ஆப் இந்தியா.

தி ஆல் இந்தியா ஹாண்ட்லூம் பேப்ரிக்ஸ் மார்க்கெட்டிங் கோவாப்பரேடிவ் சொஸைட்டி லிட். ஜன்மபூமி சேம்பர்ஸ், போர்ட் ஸ்டிரீட், பம்பாய்—1. இந்தியா,

கொழும்பு-7, வீ ஸ்டிரீட்.
ஜாப்னு-41, கிரவுண்ட்ப்ளோர், மெயின் ஸ்டிரீட்
கண்டி-69, கொழும்புத் தெரு.
ஏடன்-போரா பஜார், க்ரேடர்.
சிங்கப்பூர்-23, ரேஸ்கோர்ஸ் லேன்.
கோலாலம்பூர்-67, ஆம்பாங் ரோடு.

## மணி வாக்கு

"செய்ய வேண்டியதைச் செய்ய முயல்க. முயன்ருல் செய்யவேண்டியது இது தான் என்பதில்சந்தேகம் ஏற்படாது."

ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு கார்த்திகை மீ 5உ (20-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.

## ஒரு சிறிய வெளிச்சம்

அரசியல் அந்தகாரத்தில் சிக்கியுள்ள இலங்கையில், ஒரு சிறிய வெளிச்சம் தோன்றுவதாகவுள்ளது. இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தைபற்றிப் புனராலோசனை செய்ய இரு சபைகளின் கூட்டுக் கமிட்டியை அமைப்பதைப் பற்றிய விவரங்களை, ஜனப்பிரதிநிதிகள்சபை சபாநாயகரும், பல கட்சித்தலைவர்களும் கூடித் தீர்மானித்திருக்கிருர்கள்.

கூட்டுக்கமிட்டியில் மொத்தம் 24 பேர்களிருப்பர். அதில் 15 பேர் பார்லிமெண்ட்சபை மெம்பர்கள். ஒன்பதின்மர் செனட்சபையைச் சேர்ந்தவர்கள். பார்லிமெண்ட் சபையைச் சேர்ந்த 15 பேர்க்ளில் எட்டுப் பேர் அரசாங்கத்தையும் மற்ற ஏழுபேர் எதிர்க்கட்சிகளையும் சேர்ந்தவர்களாக இருப்பர். எதிர்க்கட்சிகளைச்சேர்ந்த எழுவரில், ஐக்கியதேசியக்கட்சிக்கு இரு ஸ்தானங்[illegible]

...துள்ள வழக்குகளையும் வாபஸ் பெறவேண்டும். தமிழரசுக்கட்சியும், நேரடி நடவடிக்கைகளை, இக் கூட்டுக் கமிட்டி வேலைகள் நடப்பதை முன்னிட்டு ஒத்திவைக்கவேண்டும். இருதரப்பினரும் பரஸ்பரம் இப்படி விட்டுக்கொடுப்பதால், நெருக்கடி குறையவும், பேச்சுக்களுக்கான சூழ்நிலை ஏற்படவும் கூடும்.

இலங்கையின் இன்றைய அரசியல் முட்டுக்கட்டைக்கு முக்கிய காரணம், இங்குள்ள சோல்பரி அரசியலமைப்புச்சட்டம் தான். இதில்பலகுறைகளுள்ளனவென்பதற்கும் இதைத் திருத்த வேண்டுமென்பதற்கும் பலமுறையும் அவசரகாலச்சட்டத்தை அமுல் நடத்த நேரிட்டிருப்பதே இதற்கு அத்தாட்சி. இந்நிலை பற்றி யாரும் பெருமையடைவதற்கில்லை. இதனல் நாட்டின் முன்னேற்றமே தடைப்பட்டுள்ளது.

சிறுபான்மை மக்களுக்குப் போதிய பாதுகாப்பும் நம்பிக்கையும் அளிக்கக்கூடிய விதத்தில், அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தி, நாட்டில் சமூக ஒற்றுமையும், அரசியல் ஒத்துழைப்பும் ஏற்படத்தக்க விதமாக, இக் கூட்டுக்கமிட்டி தாராளமனதுடன் காரியங்களை செய்யவேண்டும். அப்படிச் செய்தாலே, தேசிய ஒற்றுமை பலப்பட்டு, நாடும் முன்னேறவும், நாம் அரசியல் சுதந்திரம் அடைந்த பலனைப்பெறவும் முடிவதாக இருக்கும். அதற்கு இது நல்லதொரு சந்தர்ப்பமுமாகும்.

# கூட்டு பார்லிமெண்ட் கமிட்டியில் இரு தமிழரசுக்கட்சி மெம்பர்கள்

### எஸ். ஜே. வி. யாழ்ப்பாண விஜயம்: அரசியல் முட்டுக்கட்டை தளருகிறது?: பார்லிமெண்டில் வல்வெட்டித்துறை சம்பவம்: எம். பி. க்களுக்கு பென்ஷன்

—நமது அரசியல் நிருபர்—

ஏழு மாதங்களுக்குப்பின்னர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். சென்ற சனிக்கிழமையன்று விமான நிலயத்திலும், நகரமண்டபத்திலும் அவருக்கும் மற்றத் தமிழரசு எம். பி.க்களும் அமோகமான வரவேற்புக் கிடைத்துள்ளது.

எஸ். ஜே. வி.யின் உடல் நிலை முன்னைவிட மிகவும் அபிவிருத்தியடைந்துள்ளது பற்றி பொதுவாக பலருக்கும் திருப்தி. அவரை ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு லண்டனில் வைத்தியர்கள் ஆலோசனை கூறியதாகக் கேள்விப்பட்டேன். இதுபற்றி அக்கட்சியைச் சேர்ந்த ஓர் அன்பரைக் கேட்டதற்கு "இச்சமயத்தில் அவர் ஓய்வெடுக்க எப்படிச் சம்மதிக்க முடியும்?" என்ருர்.

லண்டனிலிருந்து திரும்பியதும் அவர் மும்முரமாக அரசியல் பேச்சுகளில் ஈடுபட்டிருக்கிருர். பார்லிமெண்ட் சபைக்கும் சென்ற வெள்ளிக்கிழமையன்று சென்ருர். சபாநாயகரின் தலைமையில் நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்துக்கும் சென்று கலந்துகொண்டிருக்கிருர். அரசியல் அமைப்புச் சட்டத்தைப் புனராலோசனை செய்யும் பார்லிமெண்ட் கூட்டுக் கமிட்டியில் சமஷ்டிக் கட்சியின் சார்பிலே திரு. எஸ். ஜே. வி.யும் டாக்டர் நாகநாதனும் அங்கம் வகிப்பதாகத் தெரிகிறது. ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கூட்டுக் கமிட்டியில் எஸ். ஜே. வி. மட்டும் அங்கம் வகித்து வந்தார். புதிய கமிட்டியில் அக்கட்சியைச் சேர்ந்த மற்றொருவரும் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. செனட் சபையைச் சேர்ந்த 9 பேரில் தமிழர் இரண்டொருவராவது இருப்பரென்றும் செனட்டர் எஸ். நடேசன் மீண்டும் இதற்கு நியமிக்கப்படலாமென்றும் நம்பப்படுகின்றது.

இலங்கையைக்குடியரசாக்குவது, அடிப்படை உரிமைகள் நியமனமெம்பர்கள் நிலைமுதலியனவும், மேலும் மெம்பர்கள் கூறும் வேறு விஷயங்களும் இக்கூட்டுக் கமிட்டியில் விவாதிக்கப்படுமென்றும் அறிவித்துள்ளனர்.

கூட்டுக் கமிட்டியில் மொத்தம் 24 மெம்பர்களிருப்பர். இதில் சிறுபான்மை சமூகத்தினருக்கு அவர்களது ஜனத்தொகை வீதாசாரப்படியும் பிரதிநிதித்துவமிராது. அரசாங்கத்துக்கும், பெரும்பான்மை சமூகத்துக்குமே அதிக வாக்குகள் இருக்கும். தங்களது வாக்குப் பலத்தால், தங்கள் இஷ்டப்படியே அவர்கள் எல்லாவற்றையும் தீர்மானிப்பதாயின் இக்கூட்டுக்கமிட்டி நியமிப்பதிலேயே அர்த்தமில்லை.

சிறுபான்மை சமூக பிரதிநிதிகளின் பீதிகளையும் குறைகளையும் அனுதாபத்துடன் கேட்டு, அவற்றை நீக்குவதற்கான முறையில் தாராளமனதுடன் விட்டுக்கொடுத்தாலே அவசரகாலநிலை மீண்டும் ஏற்படாமலும் நாடு ஒற்றுமையாக முன்னேறி, இங்கு ஜனநாயகம் வெற்றிபெறவும் முடியுமாறு, புதிய அரசியலைத் தயாரிக்க முடியும்.

கட்சி வேற்றுமைகளையும், தேர்தல் வெற்றிகளையும் கவனிக்காமல், மேலான அரசியல் ஞானமும் தீர்க்கதரிசனமும் காட்ட வேண்டும். மேலும் இப்போதுள்ள அரசியல் சூழ்நிலை, பேச்சுகள் சுமுகமாக நடைபெறுவதற்கு உதவியாக இல்லை. தமிழரசுக்கட்சிக்குள்ள தடை முதலியன நீங்கினலே நல்ல சூழ்நிலையில் பேச்சுகள் நடைபெற முடியும்.

ஃ ஃ ஃ

சென்ற வெள்ளிக்கிழமை பார்லிமெண்ட் சபையை கவர்னர் ஜெனரல் கூட்டினர். சாதாரணமாக சபாநாயகரே கூட்ட வேண்டும். ஆனல் அவசரகால பிரகடனத்தை 8-வது மாதத்துக்கு நீடிப்பதை சபையில் அறிவிக்கவேண்டியிருந்ததால், சபையை கவர்னர் ஜெனரல் பாதுகாப்புச் சட்டப்படி அவசரமாகக் கூட்ட வேண்டி ஏற்பட்டது.

இது ஒழுங்கல்லவென்றும், பாதுகாப்புச் சட்டம் அரசியல் சட்டத்தை மீற முடியாதென்றும், வாதிக்கப்பட்டது. ஆனல் சபாநாயகர் இதை நிராகரித்து, கூட்டம் கூட்டப்பட்டது ஒழுங்கானதே என்று தீர்ப்பளித்தார்.

அவசர காலத்தை நீக்க வேண்டுமென்றும், அதை நீடிக்கக் காரணமில்லை என்றும் தமிழரசுக் கட்சியினர் பார்லிமெண்டில் ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொண்டுவந்துள்ளனர்.

மற்ற எதிர்க் கட்சிகளில் பலரும் இதை ஆதரிக்கலாமென்ருலும், அரசாங்கம் இன்றைய நிலையில், இதை ஏற்குமா என்பது சந்தேகம்.

ஃ ஃ ஃ

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற சம்பவம் பற்றி, ஜனப்பிரதிநிதிசபையிலும், செனட் சபையிலும் கேள்விகள் எழுந்தன. செனட் சபையில் பிரதமர் கூறியதை நல்லூர் மெம்பர் டாக்டர் நாகநாதன் பார்லிமெண்டில் மறுத்து பல விபரங்கள் கொடுத்தார். இவ் விஷயம் மாஜிஸ்டிரேட்டின் விசாரணையில் இருப்பதால், தாம் எதுவும் இந்நிலையில் கூறுவதற்கில்லை என்றும், சீக்கிரத்தில் முழுவிபரங்களும் தெரிவிப்பதாகவும் கூறினர்.

இது பற்றி விசாரணை நடத்தவேண்டுமென்று சமசமாஜக் கட்சியும் வற்புறுத்தியது. கமிஷன் வைத்து விசாரணை நடத்தினலே, உண்மை பூராவும் வெளியாக முடியும். இச் சம்பவத்தை முன்னிட்டு, அரசாங்கம் இங்குள்ள இராணுவத்தைபற்றி புனராலோசனை செய்ய வேண்டியதவசியமென்று கருதப்படுகிறது.

ஃ ஃ ஃ

முன்னள் அமைச்சர் கன்னங்கரா தமக்கு பென்ஷன் அளிக்க வேண்டுமென்று செய்த மனுவை, பல கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். இதற்காக ஒரு பிரேரணையை சபையில் நிதிமந்திரி கொண்டு வருவார். பார்லிமெண்ட் மெம்பர்களுக்கும் பென்ஷன் அளிப்பது பற்றி, பல கட்சி மெம்பர்களின் கருத்துக்களையும் சபாநாயகர் கேட்டிருக்கிருர்.

தமது ஆஸ்தியெல்லாம் இழந்தும், கடன் பட்டும், பலர் தேர்தலுக்கு நின்று வெற்றி பெறுகிருர்கள். பின்னர் கிடைக்கும் எம். பி. சம்பளத்தில் மிச்சம் பிடிப்பது கஷ்டம். வேறு தொழில் உள்ளவர்களுக்குப் பரவாயில்லை. ஒரு தொழிலுமற்ற மாஜி எம். பி. க்களுக்கு வயோதிபத்தில் அவதிப்படாமல், ஏதாவது பென்ஷன் கொடுக்கப்படவேண்டியது நியாயமேயாகும்.

## தன்னம்பிக்கையுடன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எமது காலத்தில் நாம் நம்பிக்கையுடையவர்களாக வாழ்வதற்கு எமது பொருளாதாரத் திட்டங்களை விருத்தி செய்யவேண்டும். படித்த வாலிபர்கள் உத்தியோகத்தில் ஈடுபடுவதிலும் பார்க்க தொழில் விருத்தித் திட்டங்களில் அதிகம் ஈடுபடுதல் நல்லபயனையளிக்கும்.

### சிந்தனைக்கு வேலை தேவை

வெறும் புத்தகப் படிப்பு நல்ல சிந்தனையாளர்களையும் தொழில் மன்னர்களையும் உற்பத்தி செய்யாது. தொழில் மன்னர்களையும் சிந்தனையாளர்களையும் உற்பத்தி செய்வதற்கேற்ற கல்வித் திட்டத்தைப் பெறுவதற்கு நாம் வாய்ப்பற்றவர்களாகிவிட்டோம். இந்நிலையை மாற்றியமைக்கவேண்டுமானல் தொழில் துறைகள் பல்கிப் பெருக வேண்டும். கைகால்களுக்கும் சிந்தனைக்கும் வேலை தேவை. அப்பொழுதுதான் சிறந்த தொழில் மேதைகளைப் பெற வாய்ப்பேற்படுவதோடு நாடும் செழிக்க வழியேற்படும்.

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் பேசுகையில் விஞ்ஞானரீதியான உற்பத்திகளில் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தொழிலாளர் — முதலாளிமார் ஆகியோருக்கிடையில் நல்லெண்ணம் நிலவுவதோடு, பொறுப்புணர்ச்சியோடு தொழிலாளர் வேலை செய்து ஒத்தாசையாக தொழிற்சாலையின் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டுமென்றும் அதேநேரத்தில் முதலாளிகள் லாபத்தில் ஒரு பகுதியை தொழிலாளர்களுக்கு பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்றும் கூறினர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் பொது மக்கள் இப்படியான தொழிற்சாலைகளுக்கு ஆதரவு கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசும்போது கூறியதாவது:-

இந் நாட்டில் தொழில்வளர்ப் பெருகாமைக்கு முக்கிய காரணம் பல்வேறு தொழிற்சாலைகளுக்குமிடையே இணைந்து வாழும் தன்மையில்லாமையேயாகும். அபிவிருத்தியடைந்து

ஆசிரியருக்குக் கடிதம்

## தேசிய சேவையும் மாணுக்கர்களும்

வருகிற மாதம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவிருக்கும் பள்ளிக்கூடப்பிள்ளைகளுக்கான தேசிய சேவைத் திட்டம் மாணவர்களிடையே காணப்படும் ஒழுங்குக் குறைவுகளைச் சீர்படுத்துவதற்குச் சிறந்த வழியாகும். யாழ்ப்பாண மாவட்டத்து மாணவர்கள் ஆற்றக்கூடிய தேசிய சேவையோன்று உண்டு. கீரிமலைக் கடற்கரையிலுள்ள கற்பாறைகளை மாணவர்கள் ஒருவாறு சுத்தி செய்யலாம். அவ்வாறு செய்வதால் கீரிமலைக் கடல் நீச்சலுக்கு உகந்த இடமாக்கப்படலாம். நீந்தக் கற்றுக் கொள்வதற்கும் கடல் ஸ்நானம் செய்வதற்கும் இது பெரிதும் உதவும் யாழ்ப்பாண மாணவ மாணவிகளுக்கு நீச்சல் ஒரு கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளையின வீட்டிலும் ஆழமான கிணறுகள் நித்திய உபயோகத்துக்கென அமைக்கப்பட்டுள்ளன. இது காரணமாக பிள்ளைகளுக்கு நீந்தத் தெரிந்திருப்பது நல்லதல்லவா? யாழ்ப்பாணக் கல்வி உதவி வித்தியாதிபதியும் பள்ளிக்கூட அதிபர்களும் இவ் விஷயம் பற்றிக் கவனம் செலுத்துவார்களா?

எஸ். வைத்தியலிங்கம்
கீரிமலை.

## ஆஸ்பத்திரியில் இடநெருக்கடி

பண்டாரவளை, ஞாயிறு

பதுளை அரசாங்க ஆஸ்பத்திரியில் இடநெருக்கடி அதிகமாக இருகிறபடியால் நோயாளிகட்கு மிகவும் அவதியாக இருக்கிறது.

தோட்டப் பகுதிகளில் இருந்து செல்லும் நோயாளிகள் பலரை இடமின்மையால் அனுமதிக்க முடியாதென மீண்டும் அனுப்பிவிட்டனர்.

வசதியுள்ளவர்கள் தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுகின்றனர். அரசாங்க ஆஸ்பத்திரியில் ஒரு கட்டிலில் இரு நோயாளிகள் படுத்து உறங்குகின்றனர். தரையில் படுக்கவும் இடமில்லை, இருந்தாலும் படுகக்ப் பாய்கூட ஒழுங்காகக் கிடைப்பதில்லையெனத் தெரிகிறது.

## கலையையும்....

(1ம் பக்கத்தொடர்ச்சி)

புறமும் முட்டி வழிந் கொண்டிருந்தது. மேடையில் தடுப்புக்காவலில் இருந்தவர்களும் செனட்டர்களும், மாநகரசபை அங்கத்தவர்களும் எம். பி.க்களும் பிரமுகர்களும் அமர்ந்திருந்தனர்.

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:

தமிழ்ப்பேசும் மக்கள் அமைதியாகவும் பொறுமையுடனும் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வரும் அதே வேளையில் மறுபுறத்தால் பொருமையும் வளர்ந்து வருவது வரவேற்கக்கூடியதாகவில்லை. அளவு கடந்த ஆசையால் பொன்முட்டையிடும் வாத்தைக் கொன்று விடக்கூடாது.

கிளிநொச்சி எம். பி. திரு. எஸ். சிவசுந்தரம் பேசுகையில் கட்டடங்கள் அமைப்பதிலும் காணிகள் வாங்குவதிலும் நகைகள் வாங்கி அணிந்து மகிழ்வதிலும் ஈடுபடுத்தப்படும் பணத்தை தொழில்களை விருத்தி செய்வதில் ஈடட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

ஆரம்பத்தில் திரு. மூர்த்தி சகலரையும் வரவேற்றுப் பேசினர். கூட்டத்தில் மற்றும் பலரும் பேசினர்.

# கெய்ரோவில் முத்தலைவர்கள் ஆலோசனை

## லாவோஸ், பேர்லின் வியட்நாம் பற்றி நேரு கருத்து

கெய்ரோ, நவ. 19

பாரதப் பிரதமர் நேரு, யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ, ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி கேணல் நாஸர் ஆகியோர் இன்று இரண்டாவது தடவையாகச் சந்தித்து பூர்வாங்க ஆலோசனை நடத்தினர்.

அமெரிக்க, மெக்ஸிக்கோ சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு நேற்று கெய்ரோ வந்துசேர்ந்த பாரதப் பிரதமர் ஸ்ரீநேரு, கெய்ரோவில் ஜனாதிபதி நாஸருடனும் யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோவுடனும் பூர்வாங்க ஆலோசனை நடத்தினர்.

ஸ்ரீநேரு கெய்ரோ விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அவரை மார்ஷல் டிட்டோவும் கேணல் நாஸரும் வரவேற்றனர். இதன்பின் மூன்று தலைவர்களும் ஒரு காரில் ஜனாதிபதி நாஸரின் மாளிகைக்குச் சென்றனர். இதன்பின் பாரதப் பிரதமர் கெய்ரோவிலுள்ள பாரத தூதா காரியாலயத்துக்குச் சென்றார்.

கெய்ரோ திரும்பும் வழியில் பாரிஸ் விமான நிலையத்தில் சிலமணிநேரம் தங்கிய பிரதமர் ஸ்ரீநேருவை பிரஞ்சு கலாசார மந்திரி விமான நிலையத்தில் வரவேற்றார். இருவரும் விமான நிலையத்திலேயே உணவருந்தினர். பாரிஸ் விமானநிலையத்தில் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்த ஸ்ரீநேரு பின்வருமாறு கூறினர்:

### வியட்நாமியரே தீர்க்கவேண்டும்

வியட்நாம் பிரச்சினையை வியட்நாம் மக்களே தீர்க்கவேண்டும். வியட்நாமில் அந்நியர் தலையீடு அதிகரித்தது தான் பிரச்சினைகளுக்குக் காரணம். தென்வியட்நாம் அரசாங்கம் சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனுடன் ஒத்துழைக்காதது துரதிர்ஷ்டமானது.

### நற்பலன் இருக்கத்தான் செய்யும்

அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடியுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி ஸ்ரீநேரு குறிப்பிடுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:-

திரு. கென்னடியுடன் நான் நடத்திய பேச்சுவார்த்தைகள் உலக நெருக்கடியைக் குறைக்குமென்று என்னல் சொல்ல முடியாது. அற்பகாரியமானாலும் நற்பலன் இருக்கத்தான் செய்யும்.

திரு. கென்னடியைச் சந்தித்தபின் தமக்கு அவர்மீது மேலான அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அல்ஜீரியாபற்றிக் குறிப்பிடுகையில அல்ஜீரியா சுதந்திர நாடாக இருக்கவேண்டுமென்றார்.

யூகோஸ்லேவிய அதிபர் மார்ஷல் டிட்டோ கெய்ரோ செல்வதுபற்றி நேற்றுக்காலைவரை தமக்குத் தெரியாதென்று ஸ்ரீநேரு தெரிவித்தார்.

### ஜெனிவா விமானநிலையத்தில்

ஜெனிவா விமானநிலையத்தில் பாரதப்பிரதமர் தங்கியிருந்த சிறிதுநேரத்தின்போது ஜெனிவாவில் நடைபெறும் லாவோஸுக்கான சர்வதேசக் கமிஷனில் இந்தியப் பிரதிநிதியாகவுள்ள ஆர்தர் லாலுடனும் கனடாப்பிரதிநிதியுடனும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்பின் பத்திரிகை நிருபர்களிடம் ஸ்ரீநேரு பேசுகையில் லாவோஸ் நிலைமை திருந்துவதாகவும் முத்தரப்பு இளவரசர்களும் மீண்டும் சந்தித்துப்பேச ஒப்புக்கொண்டுள்ளது நம்பிக்கையளிப்பதாக விருப்பதாகவும் தெரிவித்தார்.

பேர்லின் பிரச்சினை நம்பிக்கையளிப்பதாக வுள்ளதென்றும் இருதரப்பிலும் கடும் சொற்கள் உபயோகிக்கப்பட்டு வந்தபோதிலும் இருதரப்பினரும் சமரச ஏற்பாட்டை நோக்கியே செல்கின்றனர் என்றும் ஸ்ரீநேரு கூறினர்.

## சீக்கியர் கமிஷன்

புதுடில்லி, நவ. 19

சீக்கியர்களுக்கெதிராக பாரபட்சம் காட்டப்படுகிறதென்ற குற்றச்சாட்டு பற்றியவிசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட கமிஷன் இம்மாதம் 28-ந்திகதி தனது பகிரங்க விசாரணையை ஆரம்பிக்கும். இவ்வருட இறுதிக்குள் இக்கமிஷன் தனது அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும்.

## ஆசிரியர்களின் புதிய சங்கம்

கொழும்பு, ஞாயிறு

அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியும், அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட பள்ளிக்கூட ஆசிரியர்களின் பிரதிநிதிகளும் புதியதொரு சங்கத்தை ஏற்படுத்துவதெனத் தீர்மானித்துள்ளார்கள்.

ஏற்கெனவே ஒப்படைக்கப்படாத பள்ளிக்கூடங்கள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அரசாங்க ஊழியர்களாக விரும்பும் அப் பள்ளிக் கூட ஆசிரியர்களுக்கென ஒரு புதிய சங்கம் நிறுவுவது என அ. இ. ஆ. ச. நிர்வாகக் கமிட்டி தீர்மானித்துள்ளது. புதிய சங்கத்தை அ. இ. ஆ. ச. (அரசாங்கம்) என வழங்குவது எனப் பொதுக் காரியதரிசி திரு. ஆர். எம். அபயவர்த்தன கூறியுள்ளார்.

## மலாயாவுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும்

### மலாயா இந்தியருக்கு தாரஹேஸ்வரி புத்திமதி

கோலாலம்பூர், நவ. 19

"மலாயாவில் வாழும் இந்தியர்கள் மலாயாவுக்கு விசுவாசமாக வாழவேண்டும்" என்று இந்திய உதவி நிதிமந்திரி திருமதி தாரஹேஸ்வரி சின்ஹா கோலாலம்பூரில் மலாயா இந்தியர் தமக்களித்த வரவேற்பு உபசாரமொன்றுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

மலாயாவுக்கு மலாயாவிலுள்ள இந்தியர் முழு விசுவாசம் செலுத்தவேண்டுமென்றும் அவரவர்களின் தகுதிக் கேற்ப மலாயாவுக்கு அவர்கள் தியாகம் செய்ய வேண்டுமென்றும் திருமதி தாரஹேஸ்வரி சின்ஹா கேட்டுக்கொண்டார்.

கல்கத்தா, நவ. 19

கவி காளிதாசரின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் நேற்று உஜ்ஜயினியில் ஆரம்பமாகின. காளிதாசரின் ரகுவம்ச ஓவியக் கண்காட்சியும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## வேலணை திருக்குறிப்புத் தொண்டர் சங்கம்

வேலணை, ஞாயிறு

வேலணைப் பகுதிக் சலவைத் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சமீபத்தில் "வேலணைத் திருக்குறிப்புத் தொண்டர் சங்கம்" ஒன்றை ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

## தமிழர்கள் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செனட்டர் ஜி. நல்லையாவும் பேசினர்.

அதன் பின் உதவிமேயர் திரு: என். டி. செல்லத்துரையினல் அளிக்கப்பட்ட தேநீர் விருந்தில் திரு. செல்வநயகம் உட்படப்பலரும் கலந்துகொண்டனர்.

## காங்கோ சென்ற இத்தாலிய விமானத்தைக் காணவில்லை

### காங்கோ துருப்புகளின் தொடர்பு துண்டிப்பு

லியப்போல்ட்வில்லி, நவ. 19

கிவுமாகாணத்தில் கிண்டு என்ற இடத்தில் ஒருவாரத்துக்குமுன் ஐ. நா. படையைச் சேர்ந்த 13 இத்தாலிய விமானிகளைப் படுகொலை செய்த காங்கோலியத் துருப்புக்களை சுற்றுவெளித் தொடர்புகளில்லாமல் மலாயாத் துருப்புக்கள் செய்துவிட்டன.

இதற்கிடையில் உகண்டாவிலிந்து லியப்போல்ட் விலிக்கு பத்துப்பேர்களுடன் வந்தமற்றொரு இத்தாலிய விமானம் காணமல் போய்விட்டதாகவும் இதைத் தேடுவதில் இந்திய கான்பரா விமானங்களுட்பட ஐ. நா. படை விமானங்கள் ஈடுபட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. காங்கோ காடுகளில் காணமற்போன விமானங்கள் தேடப்பட்டு வருகின்றன.

## முதாட்டி மரணம்

### ஸ்தலத்தில் நீதிபதி விசாரணை

மாவிட்டபுரம், சனி

தெல்லிப்பழை தென்மேற்கு விழிசிட்டியைச் சேர்ந்த இளையகுட்டி கதிராசிப்பிள்ளை என்னும் 72 வயது நிரம்பிய பெண்மணி கிணற்றுள் விழுந்து மாண்டது சம்பந்தமாக மல்லாகம் நீதிபதி திரு. வெல்லி டி. தாமோதரம் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று மரண விசாரணை நடத்தினர். காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். தியாகராஜா சாட்சிகளை நீதிபதி முன் ஆஜர் செய்தார்.

பிரேதத்தை முதலிற் கண்ட காலஞ்சென்றவரின் மருமகன் ஆறுமுகம் சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவருக்கு இரு பிள்ளைகளுண்டென்றும் காலஞ்சென்றவரின் கணவர் சுகயீனம் காரணமாகப் படுத்த படுக்கையாய் இருப்பதாகவும் காலஞ்சென்றவர் நேற்று இரவு சாப்பிட்டுவிட்டு படுக்கச் சென்றுரென்றும் அதிகாலை 5-30 மணியளவில் காலஞ்சென்றவரின் கணவனை சரவணை இளையகுட்டி காலஞ்சென்றவரை எங்கே என்று கேட்டபோது அவரைக் காணமையால் தாங்கள் தேடியதாகவும் காலஞ்சென்றவரின் பிரேதம் வீட்டிலிருந்து 250 யார் தூரத்தில் உள்ள ஒரு தோட்டக்கிணற்றுள் காணப்பட்டதாயும் தாங்கள் பொலிசுக்கும் கிராம விதானைக்கும் அறிவிக்கவே பொலிசார் வந்து பிரேதத்தை வெளியே எடுத்ததாகவும் கூறினர்.

அடுத்தாகச் சாட்சியமளித்த காலஞ்சென்றவரின் பிள்ளைகளான இளையகுட்டி வேல்மயில் வாகனம், சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை ஆகிய இருவரும் மேற்கூறியவாறே தெரிவித்தனர்:

நீதிபதியின் கேள்விகளுக்கு இவர்கள் பதிலளிக்கையில் தங்களுக்கிடையில் சொத்துக்கள் சம்பந்தமாகத் தகராறு கிடையாதென்றும் சொந்துக்கள் தகப்பனுடைய பேரில் இருப்பதாகவும் . காலஞ்சென்றவர் சம்பவம் நடைபெற்ற கிணற்றடிக்கு போகவேண்டிய அவசியம் இல்லையென்றும் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் எஸ். இராஜசூரியா பிரேத பரிசோதனை நடத்தினர். நீதிபதி தமது தீர்ப்பை ஒத்திவைத்துள்ளார்.

## "கோழிக்கூட்டின் மேல் சால்வை இருந்தது"

### ஊரெழு கொலை வழக்கில் சார்ஜன்ட் சாட்சியம்

#### மூன்ருவது எதிரியின் தாயாரும் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊரெழு கொலை வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவால்டன் முன்னிலையில் மீண்டும் விசரரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாரிமுத்து மார்க்கண்டு என்பவரைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும் கொலை செய்ததாகவும் கொலைக்கான சாட்சியங்களை மறைத்ததாகவும் குற்றம் சாட்டி சுப்பையா மாடசாமி, முத்து முத்துச்சாமி என்னும் கார் சாரதி, ஓய்வு பெற்ற மராமத்து இலாகா ஓவர்சியர் கே. செல்லையாவின் மகள் செல்வி சரஸ்வதி ஆகியோர் மீது சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் கே. செபமாலை இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

பிராசிக்கியூஷன் தரப்பில் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. ஏ எஸ். மரியநாயகம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

முதல் எதிரியின் சார்பிலும் மூன்றும் எதிரியின் சார்பிலும் திருசெல்லத்துரை ஆஜரானர். இரண்டாம் எதிரியின் சார்பில் திரு. ஆர். விசுவநாதன் ஆஜரானர்.

மூன்ருவது எதிரி செல்வி சரஸ்வதியின் தாயார் திருமதி பாக்கியப்பிள்ளை செல்லையா சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:-

முதலாவது எதிரி எங்கள் வீட்டு வேலைக்காரன். இரண்டாம் எதிரி எங்கள் உறவினரான ராஜரத்தினத்துடன் வசிப்பவர். நான் அவரை அங்கு பார்த்திருக்கிறேன். நான் ராஜரத்தினதுடன் அவரது வீட்டில் ஒருபோதும் வசித்ததில்லை. ராஜரத்தினத்தின் வீட்டுக்கு சுமார் அரை மைல் தூரத்தில் நானும் எனது கணவரும் வசித்து வருகிறோம்.

குறுக்குவிசாரணையின்போது திருமதி பாக்கியப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

முதலாவது எதிரியின் சால்வை என்று நான் பொலிசாருக்கு ஒருபோதும் அடையாளம் காட்டவில்லை. எப்போதாவது இரண்டாம் எதிரியின் காரை நான் வாடகைக்கு அமர்த்துவதுண்டு. உரும்பிராயில் ஒரு காரை நான் வாடகைக்கு அமர்த்துவது வழக்கம். ராஜரத்தினத்திடம் இரண்டாவது எதிரி என்ன முறையில் வேலைக்மர்த்தப்பட்டுள்ளாரென்று எனக்குத் தெரியாது.

### சார்ஜன்ட் சாட்சியம்

சுன்னுகம் பொலிஸைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் திரு. பி. முருகேசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

27-ந் திகதி மாலை 5-30 மணியளவில் கோழிக்கூட்டின் மேலிருந்து ஒரு சால்வையைக் கண்டெடுத்தேன். அதில் இரத்தம் போன்று கறைபடிந்திருந்தது. முதல் எதிரியை பின்னர் நான் கைது செய்தேன். பொலிஸ் நிலையத்தில் அவர் தனது சால்வை என்று அடையாளம் காட்டினர்.

நீதிபதி:- சால்வை தன்னுடையதென்று அவர் ஒப்புக்கொண்டாரா?

சாட்சி:- ஆம் ஐயா!

சாட்சி மேலும்கூறியதாவது:

28-ந் திகதி மாலை 5 மணிக்கு சால்வையை திருமதிபாக்கியப்பிள்ளையிடம் காண்பித்தேன். அது முதலாம் எதிரியின் சால்வை என்று அவர் அடையாளம் காட்டினர். வடக்கு எல்லை வேலிப்பகுதியில் சில பொருள்கள் எரிக்கப்பட்டிருந்ததையும் நான் கண்டேன். பாய் ஒன்று எரிக்கப்பட்டிருந்ததாக அந்தச் சாம்பரிலிருந்து தோன்றியது.

புகைப் படப்பிடிப்பாளர் வரும்வரை நீதிமன்ற வளவில் காரை பொலிஸ் கான்ஸ்டபிள் ராஜபக்ஸா காவல் புரிந்தார்.

குறுக்கு விசாரணைக்குப்பதிலளிக்கையில் 1961-ம் ஆண்டு மே மாதம் 26-ந் திகதி இன்ஸ்பெக்டர் செபமாலை, உதவி இன்ஸ்பெக்டர் தேவசகாயம் ஆகியோருடன் தான் செல்லையாவின் வீட்டுக்கு பிற்பகல் 2-45 க்குச் சென்று சோதனை செய்ததாகவும் அன்று சால்வையைத் தான் காணவில்லையென்றும் கூறினர்.

பொலிஸ் சேவையிலிருந்து ராஜினமாச் செய்த முன்னாள் கான்ஸ்டபிள் அழகக்கோன் பின்னர் சாட்சியமளித்தார்.

கைச் சட்டையை மடித்தபடி கட்டைக் களிசான் அணிந்திருந்த சாட்சியை ஒழுங்கான முறையில் உடையுடுத்து நீதிமன்றத்துக்கு வரவேண்டும் என்று நீதிபதிஎச்சரித்தார்.

மேல்விசாரணை டிசம்பர் மாதம் 2-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# " 'டோர்ச் லைட்'டினுல் தலையில் அடித்தார்"

## பொலிஸ்காரரைத் தாக்கியதான வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

சென்ற ஜனவரி மாதம் 24ம் திகதி ஜேமிஸ் எனனும பொலிஸ் கான்ஸ்டபிளை கோப்பாயில் தாக்கியதாக சங்கானையைச் சேர்ந்த பொன்னையா சண்முகம், தம்பிப்பிள்ளை சதாசிவம், சங்கரப்பிள்ளை துரைராஜா ஆகியோர்மீது குற்றஞ் சாட்டித்தொடரப்பட்ட வழக்கு இன்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

கோப்பாய் பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் மெடகொடகே ஜேமிஸ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நானும் கான்ஸ்டபிள் குணதிலகாவும் கோப்பாய் வடக்கில் ரோந்து சுற்றிவரும்போது எங்களுக்கு சில விஷயம் பற்றி தகவல் கிடைத்தது. இத்தகவலின் பேரில் கோப்பாய் வடக்கிலுள்ளகிருஷ்ணன் கோவிலுக்குச் சென்ருேம். அங்கு ஒரு மரக்குத்தியை வீதியின் குறுக்கே போட்டுவிட்டு கோவிலுக்கு அருகில் காத்திருந்தோம். அதிகாலை 2-30 மணியளவில் ஒரு கார் உரும்பராய் வழியாக வந்து மரக்குத்தி போடப்பட்டிருந்த இடத்தில் நின்றது. நான் காருக்கருகில் சென்று காரைப் பரிசோதனை செய்யப் போவதாகச் சாரதியிடம் கூறினேன். காரினுள் பார்த்தபோது கார் சாரதியின் ஆசனத்துக்குப் பின்னுல் ஒரு பெரிய போத்தலில் வடிசாராயம் இருக்கக்கண்டேன். அப்பொழுது நான் காரினுள் இருந்தவர்களிடம் அவர்கள் பொலிஸ் ஷ்டேசனுக்கு வர வேண்டுமெனக் கூறினேன். அவர்கள் சிறிதுதயங்கினுர்கள். பின்சாரதி காரை ஓட்டினுர். கார் அரைமைல் தூரம் சென்றதும் பின் சீட்டில் இருந்த ஒருவர் காரை நிறுத்தும்படி சாரதியிடம் கூறினுர். நான் காரை நிறுத்த வேண்டாமெனவும் பொலிஸ் ஸ்டேஷனுக்கு காரைச்செலுத்தும்படியும் கூறினேன். அந்த நேரத்தில் இரண்டாம் எதிரி டோர்ச்லைட் ஒன்றினுல் என்னை அடித்தார். நானும் டோர்ச்லைட்டினுல் அடித்தேன். கான்ஸ்டபிள் குணதிலகா காரிலிருந்து இறங்கினுர். 3-வது எதிரியும் இறங்கினுர். அப்பொழுது என்னை முதல் எதிரி மூன்று நான்கு தடவைகள் கத்தியால் குத்தினுர். நான் கத்தியைப் பறித்தேன். மற்றவர்கள் வடி சாராயத்தை எடுத்துக் கொண்டு சென்ருர்கள். நான் இரண்டாவது எதிரியைப் பிடித்து காரினுள் வைத்துக்கொண்டேன்.

குணத்திலகாவை மூன்ருவது எதிரி காரின் 'ஸ்டார்ட்டிங் ஹாண்டிலால்' அடித்ததாக குணதிலகா என்னிடம் தெரிவித்தார்.

இன்ஸ்பெக்டர் தேவசகாயம் [illegible] ந்த இடத்துக்கு அப்பொழுது வந்து எனது வாக்கு[illegible]த்தைப் பதிவுசெய்தார். [illegible] னர் நானும் இன்ஸ்பெக்டரும் எதிரிகளைத்தேடி சென்று மூன்ரும் எதிரியை சுமார் 20 யார்தூரத்தில் கைது செய்தோம். நாங்கள் பொன்னையா வீட்டுக்குச் சென்று பார்த்தபோது பெரிய வடிசாராயப்பே[illegible] 4 உடைந்த [illegible]ண்டுகள் கிடந்ததைக் கண்டோம். அதன் பிறகு நான் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன்.'

கோப்பாய் பொலிஸைச் சேர்ந்த குணதிலகா யாழ்ப்பாணம் ஜே. எம். ஒ. டாக்டர் எஸ். வேலும் மயிலும், உதவிப் பொலிஸ் இன்ஸ்பெச்டர் எஸ். மாணிக்கம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெகடர் தேவசகாயம் சாட்சிய மளிக்கையில், காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் களின் உறுதிப்படுத்தப்பட்ட வாக்கு மூலங்களை பொலிஸார் எதிரிதரப்பினரிடம் சமர்ப்பிக்கவில்லை என எதிரி தரப்பில் ஆஜரான திரு. கணேசலிங்கம் சுட்டிக்காட்டினுர்.

இந்த நிலையில், இவ்வித வாக்கு மூலங்களை எதிரிதரப்பினரிடம் சமர்ப்பிக்காவிட்டால் தாம் வழக்கைத் தள்ளுபடி செய்யத் தயங்கமாட்டாரென மாஜிஸ்திரேட் வழக்கைத் தொடர்ந்திருந்த இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்தார்.

வழக்கு இம்மாதம் 22-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

---

## கல்யாண வீடு கலாட்டா வீடாகியது

### தரகரின் தகிடுதத்தம்

பண்டாரவளை, வெள்ளி

பண்டாரவளையைச் சேர்ந்த தெஹிவின்னை என்ற கிராமத்தில் அப்புகாமி என்பவரின் மகளுக்குத் திருமணம் ஏற்பாடாகியிருந்தது.

திருமண தினத்தன்று மணமகன் வீட்டார் நுவரெலியாவிலிருந்து சகல ஏற்பாடுகளுடன் மணமகள் வீட்டிற்கு வந்தனர் ஆனுல் அங்கு திருமண ஏற்பாடு எதுவுமில்லாததைக் கண்டு திகைத்தனர்.

காரணம் இத் திருமணத்தை ஏற்பாடு செய்திருந்த தரகர் இருபக்கமும் பொய்சொல்லி இரு பகுதியினரிடமும் பணத்தைப் பெற்றுக்கொண்டு கம்பி நீட்டி விட்டார். பெண்வீட்டார் பதினையாயிரம் வரதட்சணை தருவார்கள் என்று மாப்பிள்ளை வீட்டாரிடமும் மாப்பிள்ளை வரதட்சணை கேட்கவில்லை என்று பெண் வீட்டாரிடமும் பொய் சொல்லி திருமணத்தை கடந்த வெள்ளியன்று ஏற்பாடு செய்து விட்டு மறைந்துவிட்டார் மணமகன் வீட்டாரும் இதற்காக பெரும் ஏற்பாடுகளுடன் வந்துவிட்டனர் வந்தவர்கள் சீதனக் கதையைத் தொடங்கினர் பெண்வீட்டார் அது பற்றி மறுக்கவே விவாதம் முற்றி லாட்டாவில் முடிய இருந்தது! விஷயம் வெலிமடைப் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டது. மணமகன் வீட்டார் வழக்குப் போடுவதாக பயமுறுத்திப் போனுர்கள்.

பாவம், அன்று மணமகள் பட்டினி கிடந்ததும் மணமகள் கண்ணீர் விட்டதும் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

# பொலிஸ் மீது 'அசிட்' வீசிய வழக்கு

## சந்தேக நபர்களை 21ந் திகதிவரை ரிமாண்டில் வைக்க உத்தரவு

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் மகேந்திர சிறி [illegible] அசிட் வீசியதையொட்டி சந்தேகத்தின் மீது கைது செய்து விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த சுன்னுகம் பொலிஸ கான்ஸடபிள் விக்கிரம சுந்தரா, காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் சமையல் தொழில் செய்யும் ஏ. ஜெயசேன ஆகிய இருவரையும் காங்கேசன்துறைப் பொலிசார் மீண்டும் நேற்று மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் ஆஜர் செய்து, தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

இதை ஆட்சேபித்து சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் இரு சந்தேக நபர்களையும் பிணையில் விடும்படி நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

வழக்கைத் தாக்கல் செய்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. பிறிட்டோ இதை ஆட்சேபிக்கையில் இவ்வழக்கு சம்பந்தமாக பொலிசாரின் விசாரணை முடிவுற வில்லையென்றும் சந்தேகநபர்கள் பிணையில் விடுபட்டால் விசாரணையை தொடர்ந்து நடத்த இவர்கள் ஒரு முட்டுக்கட்டையாக இருப்பார்கள் என்றும் ஆதலால் விசாரணை முடியும்வரை அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படியும் நீதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

நீதிபதி சந்தேக நபர்களை இம்மாதம் 21ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

---

## கொலை முயற்சி வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படும்

தெல்லிப்பழை, ஞாயிறு

புத்தூர் மேற்கு வாசியான பெரியான் சிதம்பரப்பிள்ளை என்பவரை உடுவிலில்வைத்து கடந்த ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி கத்தியால் வெட்டிக் கொலை செய்ய எத்தனித்ததாக உடுவிலைச் சோந்த வைரவன் பாலன் என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது. சுன்னுகம் பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று நான் 'றிசேவ் டியூட்டியில்' இருந்தேன். பொலிஸ் நிலையத்திற்கு முன்னுல் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒருவர் காயம்பட்ட ஒருவரைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்திருப்பதாகத் தெரிவித்தார். நான் காயமடைந்தவரைப் பார்த்தபோது காயம் பலமாக இருந்தது. அவரைக் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுமாறு கூறினேன்.

சங்கானைப் பொலிஸ் சார்ஜண்ட் முருகேசு கான்ஸடபிள் கல்பொட ஆராய்ச்சி என்போர் சாட்சியமளித்தனர். நீதிபதி வழக்கைச் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தினுர்.

## எதிரிகள் அப்பீல் செய்தனர்

பருத்தித்துறை, ஞாயிறு

பொலிஸ் காரரொருவரைத் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் நாலுமாதச் சிறைத் தண்டனைபெற்ற எதிரிகள் இருவரும் நீதிபதியின் தீர்ப்பை ஆட்சேபித்து அப்பீல் செய்துள்ளனர்.

கரவெட்டியைச் சேர்ந்த சி மார்க்கண்டு ஜ.காங்கேசு ஆகிய இருவருமே இவ்வழக்கின் எதிரிகளாவர்.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொ
ல
ர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே !
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இண்டஸ்ரீஸ்லிமிட்
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்
J. D. 3.

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

சொந்த விற்பனை விநியோகஸ்தர்கள்:
- மில்லஸ்ர் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணுகலை.
- என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் ஹார்ட்வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
- எச். ஏ. பகஸ்ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே
பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை
யளிப்பதும் இதுவே

சக்தி
பலம்




முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**திங்கள் 20-11-61**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6, இரவு 9.)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினட்டும், வீணையும், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துககள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 நீலா இராமசுவாமி—வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம்—பேச்சு, 9-30 பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை—பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சி. எஸ். சங்கரநாராணன்-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 குமாரி சந்திரசேகரன்-பாட்டு 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-35 நல்லுரை 8-00 சி. எஸ். சங்கரநாயாணன்—பாட்டு, 8-30 குமாரி சந்திரசேகரன்—பாட்டு, 9-15 திரைப்பட இசை, 9-30 சென்னை அஞ்சல்.

---

## ஆசிரியர்- மாணவர் போட்டி

### ஆசிரியர் கோஷ்டி வெற்றி

தெல்லிப்பழை, ஞாயிறு

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் ஆசிரியர்களும், யாழ்ப்பாணம் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்க ஆதரவில் நிகழ்ந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இரண்டாம் பிரிவுச் சாம்பியனாக வந்த மாணவர் உதைபந்தாட்டக் கோஷ்டியும் பங்கு பற்றிய உதைப்ந்தாட்ட போட்டியில் ஆசிரியர்கள் 2 - 1. கோல்களால் வெற்றியீட்டினர். திரு. கே. கிருஷ்ண பிள்ளை மத்தியஸ்தராகக்கடமையாற்றினார்.

ஆசிரியர்களும் கல்லூரி முதலாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியினரும் பங்குபற்றிய உதைபந்தாட்டப் போட்டியில் இரு தரப்பினரும் கோலெதுவும் போடவில்லை. அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

---

## திருமலையின் வெற்றி

திருக்கோணமலை, ஞாயிறு

மட்டக்களப்பில், நடைபெற்ற கிழ்க்குமாகாண, பாஉசாலைகளின் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் சென்றசனி, ஞாயற்றுக்கிழமைகளில் சிறப்பாக முடிந்தன. இவ்விறுதியாட்டங்களில் திருக்கோணமலை சென்யோசப் கல்லூரியினர் (19 வயது) ஏ டிவிஷன், '16வயதுஏ'டிவிஷன் சாம்பியன்களாகவும், திருமலை சென்யோசப் தமிழ்ப்பாடசாலையினர் '19 வயது"பி டிவிஷன் சம்பியன்கலாகவும், வெற்றி பெற்றனர். கிழக்கு மாகாண பொலிஸ் சுப்பிரிண்டனும் மட்டுநகர் உதைபந்தாட்டச் சங்கத் தலைவருமான திரு. வன்ருவஸற் வெற்றிபெற்ற குழுக்களுக்கு கிண்ணங்களையும் வெற்றிக் கேடயங்களையும் வெற்றிக் கேடயங்ளையும், வழங்கினார்.

## 'மோட்டார் சைக்கிள் மோதியதைப் பார்த்தேன்'

### விபத்து வழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மருதனமடத்தைச் சேர்ந்த வண. பிதா செல்வரத்தினம் தான் ஓட்டிவந்த மோட்டார் சைக்கிளினால் சுன்னாகத்தைச் சேர்ந்த வைரமுத்து தாமோதரம்பிள்ளை என்பவரை மோதி அவருக்கு மரணம் விளைவித்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் இச் சம்பவத்தைக் கண்ணுற்பார்த்ததாகக் கூறப்படும் தம்பாலையைச் சேர்ந்த கணபதி தம்பிப்பிள்ளையின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இவ்வருடம் அக்டோபர் மாதம் 29ம் திகதி சுமார் மாலை 7 மணியளவில் சுன்னாகத்தை நோக்கி காங்கேசன்துறை—யாழ்ப்பாணம் பிரதான வீதியால் வந்துகொண்டிருந்தேன். ஒரு மோட்டோர் சைக்கிள் யாழ்ப்பாணப் பக்கத்திலிருந்து வந்து என்னைக் கடந்து சுன்னாகம் நோக்கிச் சென்றது. அவ்வேளையில் காலஞ்சென்றவர் கொத்தியாலடி ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்குவந்து சுன்னாகம் நோக்கிச் சென்றார். காலஞ் சென்றவருக்குப் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியதை நான் பார்த்தேன். இச்சம்பவத்தைப் பார்த்ததும் நான் பயந்து விரைந்து சென்று காலஞ்சென்றவரின் மகனுக்கு இதனைக் கூறினேன். இச்சம்பவம் நடைபெற்ற பின் நான் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைத் தாண்டிச் சென்றபோதிலும் நான் பயம் காரணமாக இச்சம்பவம் பற்றிப் பொலிசாருக்கு அறிவிக்கவில்லை.

இந்நிலையில் மேல் விசாரணையை நீதிபதி ஒத்திவைத்தார்.

## இளம் வாலிபர் கழகம் வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் வர்த்தலைவிளான் இளம் வாலிபர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இளம் வாலிபர் விளையாட்டுக் கழகம் 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

## யூனியன் கல்லூரி கோஷ்டி

### சுற்றுப்பிரயாணத் திட்டம்

மாவிட்டபுரம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தாரால் நடத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் கடந்தசனிக்கிழமை யூனியன் கல்லூரி மாணவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைவென்று "ஏ" பிரிவில் சாம்பியனாக வெற்றிவாகை சூடிய பின் அகில இலங்கையிலும் ஓர் உதைபந்தாட்ட சுற்றுப்பிரயாணத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளைத் தற்பொழுது செய்துகொண்டு வருகின்றனர்.

இவர்கள் அடுத்தமாதம் 20ம் திகதி தமதுசுற்றுப்பிரயாணத்தையாரம்பிப்பார்கள்.





நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம் இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

**இலவச சாம்பிள்**

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரோடக்ட்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

**நெஸ்டோமோல்ட்**

**விட்டமின் B அடங்கியது.**

# கலை அரங்கம்

## ஒரே காட்சியமைப்பை கொண்ட படம்

### 'நெஞ்சில் ஓர் ஆலயம்' பற்றி ஸ்ரீதர் தரும் தகவல்

ஓர் இளம்பெண்ணின் நெஞ்சில் கணவன் கடவுளாகத்திகழ முடியும். அதேபோல் இளைஞனின் இதயக்கோவிலில் ஒரு பெண் தெய்வமாகக் கொலுவீற்றிருக்க முடியும்.

இதை வைத்துத்தான் ஸ்ரீதர் தமது புதிய படத்துக்கு "நெஞ்சில் ஓர் ஆலயம்" என்று பெயர் வைத்துள்ளார். சித்ராலயா படநிலையத்தாரின் புதிய படம்பற்றி டைரக்டர் ஸ்ரீதர் பின்வரும் விபரங்களைத் தெரிவித்துள்ளார்.

"நெஞ்சில் ஓர் ஆலயம்" மூன்றே பாத்திரங்களைக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது.

இப்படத்துக்கு ஒரேயொரு காட்சியமைப்புத்தான். இந்தக் காட்சியமைப்பில் மருத்துவமனை, மருத்துவரின் தனி அறை, நோயாளிகள் படுக்கை அறை, புல்தரை, ஓய்வுக் கூடம் முதலியன இடம்பெற்றிருக்கின்றன.

சாலையிலிருந்து மருத்துவமனைக்கு வருவதற்காக வாஹினி படப்பிடிப்பு நிலையத்தின் சுவரை எங்களுக்குவேண்டிய அளவு இடித்துவிட்டோம்.

இக்கதையில் ஒரு டாக்டர். ஓர் இளம்பெண், அவளின் துணைவன் வருகின்றனர். டாக்டர் அந்த இளம் பெண்ணைக் காதலிக்கிருர். காலச் சுழலில் அவள் புற்றுநோயைக் கொண்ட ஒருவனை மணந்து கொள்ளுகிறுள். மனமுடைகிருர் டாக்டர். மாருத துயரத்தில் எப்போதும் மூழ்கிக்கிடக்கிருர். இந்த நிலையில் மரணத்தின் விளிம்பிலே அம்மங்கையின் மணாளன் இருக்கிருன், சாதாரண துயரத்தையும் தாங்கிக்கொள்ளாத மெல்லிய இதயம் படைத்தவள் அக்குணவதி. அவள் துடிக்கிருள் தன் கணவன் நிலையைக்கண்டு இறுதியில் தான் முன்பு காதலித்த டாக்டரின் மருத்துவ மனைக்கே தன் கணவனைக் கொண்டுவருகிருள்.



## 'கப்பலோட்டிய தமிழனுக்கு' வரி நீக்க வேண்டும்

### கண்ணதாசன் கோரிக்கை

"கப்பலோட்டிய தமிழன் படம் தமிழன் பெருமையைக் காட்டும் வரலாற்றுப்படம் இந்தப்படத்துக்கு சினிமா வரியை அரசாங்கம் நீக்கவேண்டும் என்று கவிஞர் கண்ணதாசன் கேட்டுள்ளார்.

'பாசமலர்' படத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் சென்னையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிவாஜி, ஜெமினி, சாவித்திரி, எம். என். ராஜம், எம். சரோஜா, எம். என். நம்பியார், ஸ்ரீராம், வீரப்பா, சுகுமாரி, பந்துலு ஆகியோரும் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

சினிமா அதிபர் ஏ. எல். சீனிவாசன் தலைமையில் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் கவிஞர் கண்ணதாசன் பேசுகையில் பின் பின்வருமாறு கூறினர்:

சிவாஜி கணேசனின் நடிப்பு மெருகு ஏறிக்கொண்டே வருகிறது. 'பராசக்தி' கணேசனைப் பார்க்கமுடியவில்லை. 'பாசமலர்' 'பாவமன்னிப்பு' கணேசனைத்தான் பார்க்கமுடிகிறது.

கடைசியாக 'கப்பலோட்டிய தமிழன்' ஆகியுள்ளார். கணேசன்.

இது தமிழின் பெருமையைக் காட்டும் வரலாற்றுப் படம் இந்தப்படத்துக்கு 'சினிமா வரி'யை அரசாங்கம் நீக்கவேண்டும். இதை எல்லோரும் அரசாங்கத்திடம் வற்புறுத்தவேண்டும். இப்படத்துக்கு வரியை நீக்காவிட்டால் இது போன்ற படங்கள் தயாரிக்க உற்சாகம் குன்றிவிடும்.

இப்படத்தில் நடனமேகிடையாது. ஆறுபாட்டுக்கள் உள்ளன. இந்தக்கதை எதையும் தழுவியதல்ல. இது இரவல் என்று யாராவது நிரூபித்தால் பத்துலட்சம் ரூபாய் கொடுக்கத்தயார்.

## "நெஞ்சில் ஓர் ஆலயம்"

### வளரத் தொடங்கியது

'நெஞ்சில் ஓர் ஆலயம்' வளரத் தொடங்கிவிட்டது.

நோயாளியாக முத்துராம் நடிக்கிருர். அவருடைய மனைவியாக தேவிகா நடிக்கிருர். 'கடவுளின் குழந்தை', 'தாயில்லாப்பிள்ளை' ஆகிய படங்களின் கதாநாயகன் கல்யாண்குமார் இதில் டாக்டராகத் தோன்றுகிருர். சூர்யகுமார், ராமராவ், சிவகாமி, மனோரமா, ராஜ்ஸ்ரீ ஆகியோர் நடிக்கவிருக்கும் இப்படத்தில் சிறுமி பத்மினி என்ற குழந்தையும் தோன்றுகிருர்.

## காவிரிப்பூம் பட்டினத்தில் நடனக் கல்லூரி

சரித்திரப் புகழ்பெற்ற காவிரிப்பூம்பட்டினத்தில் நடனக் கல்லூரி ஒன்று அமைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது. இது பற்றி ஆராய்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டத்திலுள்ள கோவில்களிலிருந்து இந்தக் கல்லூரிக்கு பண உதவி செய்யப்படும்.

காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தக் கல்லூரிக்காக ஒரு கட்டிடத்தை நன்கொடையாகக் கொடுக்க முன்வந்துள்ளார்.

## தமிழ் நாட்டுக்கலை உலகில் சிறந்தது

### சிவாஜி கணேசன் கருத்து

"சினிமா பார்ப்பது கெடுதல் அல்ல. சினிமாவினல் பல நன்மைகள் உண்டு" என்று நடிகதிலகம் சிவாஜி கணேசன் ஒரு வைபத்தில் பேசுகையில் கூறினர்.

"தமிழ்நாட்டு கலை உலகத்திலேயே சிறந்தது. பிறநாட்டாரும் போற்றிப் புகழ்வது நல்ல கலைஞர்களைக் கொண்டு உருவாக்கப்படும் நமது தமிழ்ப் படங்களை ரசிகர்கள் ஆதரவு கொடுத்து ஊக்குவித்தால் தான் சினிமா நடிகர்கள் முன்னேற முடியும். நல்ல கருத்துள்ள படங்களை பார்ப்பதால் ரசிகர்கள் பயன் அடைகிருர்கள்.

## சரோஜாதேவியையும் வசந்தியையும் காதலிக்கிருர்

### "மாடப்புரு"வில் எம். ஜி. ஆர். வீட்டு வேலைக்காரன் ராதா

மிகக்குறுகிய காலத் தயாரிப்பான 'மாடப்புரு' மிக வேகமாக வளர்ந்துவருகிறது. எதிர்பாராத திருப்பங்களும் புதுமையான நிகழ்ச்சிகளும் நிறைந்த கதையாக "மாடப்புருவை" உருவாக்கியுள்ளாராம் கதாசிரியர் திலகம் நாராயணசாமி.

இப்படத்தில் எம். ஜி. இராமச்சந்திரனும் டி. கே. பாலச்சந்திரனும் சகோதரர்களாகத் தோன்றுகின்றனர். இரண்டு பெண்களைக் காதலிக்கும் இக்கட்டான நிலையில் சிக்கிக் கொண்டு தவிக்கிருராம். புரட்சி நடிகர். சரோஜாதேவியும் வசந்தியும் எம். ஜி. ஆரின் காதலிகளாக வருகின்றனர்.

வழக்கறிஞர் ஒருவரைக் கொலைசெய்ததாக எம். ஜி. ஆர் மீது குற்றம்சாட்டப்படுகிறது. அதன் திய விளைவுகளைச் சமாளிக்கும் பெரும் போராட்டத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகளைச் சுற்றிச் செல்கிறதாம் இதன் திரைக்கதை.

பாலச்சந்தரின் ஜோடியாக கலைமதிதேவி நடிக்கிருர். எம். ஜி. ஆர். சரோஜாதேவி, பாலச்சந்தர் ஆகியோர் நடித்த காட்சிகள் சமீபத்தில் படமாக்கப் பட்டன. வீட்டு வேலைக்காரனுக புதுமையான பல புரட்சிகளைச் செய்கிருராம் நடிகவேள் எம்.. ஆர். ராதா.

குரங்காட்டி வேடத்தில் 'குலதெய்வம்' ராஜகோபால் தோன்றுகிருர்.



இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா விஜயா

(கொழும்பு) (வெள்ளவத்தை) (மட்டக்களப்பு)

மற்றும் 5 திரைகளில்

வீரம் நிறைந்த வெற்றிக்காவியம்!

என். டி. ராமராவ் • பி. கண்ணும்பா

ராஜசுலோசனு • பாலாஜி

எஸ். வி. சகஸ்ரநாமம் • ராஜகோபால்

ஆகியோர் நடித்த




மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

சிவாஜி கணேசன், பண்டரிபாய்

நடித்த

திரும்பிப்பார்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ராமச்சந்திரன் மாதுரிதேவி

நடித்த

மந்திரிகுமாரி

...யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலவீதி '63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்